மலர் 2 இதழ் 2

# இடி முழக்கம்

ஆசிரியர் : S. ஜஸ்டின் பிரபாகரன்
கீழ்கவரப்பட்டு,
தெ. ஆ. மாவட்டம்,
607 112.

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (*E-Books*) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (*Download*) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (*E-Book*) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (*Email*) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

உள்ளே . . .


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் குறிப்பு | ... | 1 |
| 2. | நோவாவின் வெள்ளம் | ... | 2 |
| 3. | தியானிப்போம் | ... | 5 |
| 4. | ஆவி, ஆத்துமா, சரீரம் | ... | 9 |
| 5. | ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம் | ... | 14 |
| 6. | ஆதியிலே... | ... | 20 |
| 7. | சாட்சிகள் | ... | 25 |
| 8. | கெமாட்ரியா ஜாக்கிரதை | ... | 29 |
| 9. | புதைப் பொருள் ஆராய்ச்சி | ... | 35 |
| 10. | தெய்வீக சுகம் | ... | 39 |
| 11. | வேதத்தில் சரித்திரம் | ... | 46 |
| 12. | வேதாகமத்தில் முரண்பாடு | ... | 51 |
| 12. | சிந்தியுங்கள் | ... | 60 |
| 13. | கடைசி பக்கங்கள் | ... | 66 |
| 14. | கடைசி (கால) செய்திகள்! | ... | 68 |

# ஆசிரியர் குறிப்பு

பிதாவாகிய தேவனாலும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இடிமுழக்கத்தின் எட்டாவது இதழையும் உங்கள் கரங்களில் சமர்ப்பிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இந்த இதழில் ஒரு புதிய பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது இப்பகுதி இடிமுழக்கத்தில் இடம்பெறும். முக்கியமாய் பூரண சுவிசேஷ ஆய்வு தியானங்கள் என்ற தலைப்பின் கீழ்வரும் ஜெபிக்க கற்றுக் கொள்ளுங்கள்., தெய்வீகசுகம், தியானிப்போம், ஆவி ஆத்துமா, சரீரம். ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம் என்ற கட்டுரைகளை தியானத்தோடு வாசியுங்கள், இந்த இதழில் வேதாகமத்தில் முரண்பாடு கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை செய்திகளில் மாத்திரம் ஆர்வம் காட்டுவதைவிட்டு, அவர் வருகைக்குமுன் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று விளக்கும் பூரண விசேஷ ஆய்வு தியான கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆயத்தப்படுங்கள்.

ஆசிரியர்,

# நோவாவின் வெள்ளம்

Water Canopy என்ற ஜலத்திரை உடைந்ததற்கான இன்னும் சில ஆதாரங்களை இந்த இதழில் பார்ப்போம்.

இந்த ஜலத்திரை உடைந்ததினால் ஏற்பட்ட இன்னொரு விளைவு நாம் இன்றைக்கு வானத்தில் மழைக்காலங்களில் காணும் வானவில்லாகும். ஆகாயத்திலுள்ள மழைத்துளிகளின் வழியாய் சூரிய ஒளி ஊடுருவிச் செல்ல, வானவில் உண்டாகிறது. ஆனால் நோவாவின் ஜலப் பிரளயத்துக்கு முன் மழையும் பெய்ததில்லை, மழைத்துளிகளும் ஆகாயத்தில் இருந்ததில்லை. எனவே வானவில்லும் உண்டாக வாய்ப்பில்லை! Water Canopy என்ற ஜலத்திரை மாத்திரம் இருந்தது. இதன் வழியாய் சூரிய ஒளி கசிந்ததே தவிர சிதறவில்லை. எனவே, வானவில் உண்டாக வாய்ப்பில்லை. ஆனால் இந்த Water Canopy உடைந்து ஜலப்பிரளயம் ஏற்பட்ட பிறகு தான் முதன் முதலாய் வானவில் உண்டானது. இனி மாம்சமானவைகள் எல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை, என்றும் உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்தி என் வில்லை மேகத்தில் வைத்தேன் என்று தேவன் கூறுவதாக ஆதியாகமம் ஒன்பதாம் அதிகாரம் எட்டு முதல் பதினேழு வரையிலான வசனங்களில் வாசிக்கிறோம்.

மேலும் எல்லா மாம்ச ஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாக பெருகாதபடிக்கு தேவன் இந்த வானவில்லை உடன்படிக்கையின் அடையாளமாக வைக்கிறார். ஆனால், நோவாக் காலத்து ஜலப்பிரளயத்துக்குப்பின் அநேக வெள்ளங்கள் உலகில் தோன்றியுள்ளன. தேவன் ஜலப்பிரளயம் உண்டாகாது என்று வாக்கு கொடுத்திருக்க எப்படி மறுபடியும் வெள்ளங்கள் உருவாகலாம் என்ற கேள்வி எழலாம். தேவன் வெள்ளங்களே தோன்றாது என்று கூறவில்லை என்பதை கவனியுங்கள். உலகத்தில் மாம்சமான யாவற்றையும் ஜலத்தினால் நோவாவின் காலத்தில்

அழித்ததுபோல அழிக்கமாட்டேன் என்றுதான் தேவன் சொன்னதாக வேதத்தில் வாசிக்கிறோம். எனவே சிறு வெள்ளங்கள் உண்டாகாது என்று தேவன் வாக்களிக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். இன்றும் உலகில் இப்படி சிறு வெள்ளங்கள் இவ்வாறு உண்டாவதே நோவாவின் காலத்தில் ஏற்பட்டது உலகம் முழுவதும் ஏற்பட்ட ஒரு ஜலப்பிரளயம் ஆகும்—அது ஒரு சிறிய வெள்ளம் அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது. நோவா காலத்து வெள்ளம் அவன் இருந்தஇடத்தில்மட்டும் ஏற்பட்ட சிறிய வெள்ளமாய் இருந்திருக்குமென்றால், தேவன் பின், அப்படிப் பட்ட வெள்ளம் உருவாகாது என்று கூறியிருப்பதால் சிறிய வெள்ளங்களே உலகில் உருவாகக் கூடாது. சிறிய வெள்ளங்கள் இன்றும் உலகில் உருவாகுவதே நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் சாதாரண சிறிய வெள்ளம் அல்ல என்பதை தெரிவிக்கிறது. (நோவாவின் ஜலப்பிரளயம் நோவா இருந்த இடத்தில் மாத்திரம் உண்டான ஒரு சிறு வெள்ளம் என்று கூறுபவர்கள் இக் கருத்தை கவனியுங்கள்.)

அதல்லாமல் இன்றும் வானத்தில் நாம் அவ்வப்போது காண்கின்ற வானவில் நோவாவின் ஜலப்பிரளயத்தை, நமக்கு நினைவூட்டுவதுடன் நோவாவின் வெள்ளத்திற்கு இணையான இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் இந்த வானவில்லானது மௌன எச்சரிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பூமியைச் சுற்றியிருந்த ஜலத்திரை உடைந்து நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் ஏற்பட்டதினாலும், பூமியில் ஏற்பட்ட நிலக் கோளாறுகளினாலும்தான் சகாராப் பாலைவனம் போன்ற பாலைவனங்களும் கூட உருவாகியிருக்கின்றன. நோவாவின் ஜலப் பிரளயத்திற்கு முன் சகாராப் பாலைவனம் செழிப்பானதாய் இருந்திருக்கிறதென்பதற்கு சான்றுகள் உண்டு. சகாராப் பாலைவனத்தில் ஆறுகள் பாய்ந்திருக்கின்றன என்பதற்கான தடயங்கள் இன்றும் உள்ளன. மேலும் இந்த பாலைவனத்திலுள்ள குகைகளில் காணப்பட்ட ஓவியங்களின் மூலம் சகாரா பாலைவனம் பயிர்பச்சைகளுடன் செழிப்பாய் இருந்திருக்கிறது என்பது தெரியவருகிறது.

வேதத்தில் முதன் முதலில் எழுதப்பட்ட புத்தகம் யோபுவின் புத்தகமாகும். இந்த யோபு நோவாவின் ஜலப்பிரளயம் ஏற்பட்டதற்கு பிறகு உலகில் வாழ்ந்தவர். ஜலப்பிரளயத்துக்கு வெகுசமீப காலத்தில் அவர் வாழ்ந்திருப்பார் என்பது வேத ஆராய்ச்சியாளர்களின் கணக்கு. இவர் இன்றைய சகாரா பாலைவனம் இருக்கும் அராபிய தேசத்தின் ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்தவர். இந்த

யோபின் புத்தகத்தில் ஆறும் அதிகாரத்தில் காட்டாறு, பனி உறைந்த மழை இவற்றைக் குறித்தும், முப்பத்தேழாம் அதிகாரத்தில் உறைந்த மழையைக் குறித்தும் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே இன்று பாலைவனமாய் உள்ள சகாராவில் ஆறுகளும், பனியும், உறை பனியும் இருந்திருக்கிறது என்பதற்கு வேதமும் சான்று பகருகிறது. எனவே சகாராபாலைவனம், Water Canopy என்ற ஜலத்திரை உடைந்து சூரியனுடைய கதிர்கள் நேராய் பூமியில் விழ ஆரம்பித்ததினால் நோவாவின் ஜலப்பிரளயத்தற்கு பின்னரே ஏற்பட்டிருக்க வேண்டும் என உணரலாம்.

மேலும் இந்த ஜலப்பிரளயத்துக்குப் பின்தான் பருவ காலங்கள் உலகில் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன, பூமியுள்ள நாளளவும், விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடைகாலமும், மாரிகாலமும், பகலும், இரவும்' ஒழிவதில்லை என்று தேவன் உரைப்பதாக ஆதியாகமம் எட்டாம் அதிகாரம் இருபத்திரண்டாம் வசனத்தில் வாசிக்கிறோம், ஜலப்பிரளயத்திற்கு முன் ஜலத்திரை பூமியை சூழ்ந்து இருந்ததால் பூமியெங்கும் ஒரே சீதோஷ்ண நிலை இருந்தது. ஜலத்திரை உடைந்து வெள்ளம் சம்பவித்தப் பிறகுதான் பருவ காலங்கள் மாறி மாறி வர ஆரம்பித்தன. பருவ காலங்கள் மாறி மாறி வருவதற்கு பூமி 23½° சாய்வாகச் சுற்றுவதே காரணம். ஜலப் பிரளயத்திற்கு பின் ஜலப்பிரளயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் நிலக் கோளாறுகளினாலும் பூமி 23½° சாய பருவ காலங்கள் உலகில் முதன் முதலில் உருவாக ஆரம்பித்தன. இதைக் குறித்து ஜலப்பிரளயம் உண்டானால் அது பூமியை கிறது மேலதாக்கும் என்று யோபு பனிரெண்டாம் அதிகாரம் பதினைந்தாம் வசனம் கூறுகிறது,

மேற்கூறிய சான்றுகள் பூமியைச் சுற்றி Water Canopy என்ற ஜலத்திரை இருந்திருக்கிறது என்பதையும் அது உடைந்தது தான் ஜலப்பிரளயம் உண்டானது என்பதையும் நிரூபிக்கின்றன. உலகத்தின் பெரிய மலை சிகரங்களுக்கு மேலே இருபத்திரண்டரை அடி உயரத்திற்கு நின்றதான நோவாவின் ஜலப் பிரளயத்தின் அவ்வளவு தண்ணீரும் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு எங்கு போனது என்ற கேள்விக்குப் பதிலை அடுத்த இதழில் பார்ப்போம்.

❀ ❀ ❀

# தியானிப்போம்

''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லா வற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.'' மூன்று யோவான் இரண்டாம் வசனம்.

இவ்வார்த்தைகளை யோவான் அவனுக்கு பிரியமான காயுவுக்கு எழுதுகிறார். மூன்று யோவான் நான்காம் வசனத்தில் ''என் பிள்ளைகள் என்று காயுவையும் சேர்த்து யோவான் சொல்லுவதால் ''காயு'' யோவானால் இரட்சிப்புக்குள் வழி நடத்தப்பட்டவன் என நாம் உணரலாம். அதாவது யோவான், காயுவின் ஆவிக்குரிய தகப்பன். தனது ஆவிக்குரிய மகனான காயுவுக்கு நிருபம் எழுதும் போது யோவான் ''உன் ஆத்துமா வாழ்கிறதுபோல'' என்று ஆரம்பிக்கிறார். ''ஆத்துமா'' என்ற பதம் இங்கு ஆவி ஆத்துமா சரீரத்தில் சொல்லப்படுகிற அறிவு சிந்தனை பணியை செய்கிற ஆத்துமா என்ற அர்த்தத்தில் குறிப்பிடவில்லை. ஆத்துமா என்ற பதத்திற்கு கிரேக்க மூல பாஷையில் ''Pseuche'' என்ற வார்த்தை தான் வேதத்தில் பயன் படுத்தபடுகிறது. ''Pseuche'' என்ற பதம் அறிவு, சிந்தனை பணியை செய்கிற ஆத்துமா என்கிற அர்த்தத்திலும் உபயோகப்படுத்த படுவது உண்டு. சில இடங்களில் மனிதனுடைய 'வாழ்க்கை' அல்லது 'ஜீவன்' என்ற அர்ததத்திலும் சொல்லப்படுவது உண்டு. இங்கு Psecuhe என்று மூல பாஷையில் சொல்லப்பட்டுள்ள ஆத்துமா என்ற வார்த்தை மனிதனின் 'ஜீவனை' குறிக்கிறது. யோவான் இங்கு தன்னால் இரட்சிப்புக்குள் கொண்டுவரப்பட்ட காயுவை உன் 'ஆத்துமா' வாழ்ந்திருக்கிறது போல அதாவது ''உன் ஜீவன் வாழ்ந்திருக்கிறது போல'' என்கிறார். ':இங்கே வாழ்ந்திருக்கிறது என்பது காயு அடைந்த இரட்சிப்பின் அல்லது மறுபிறப்பின் அனுபவத்தைக் குறிப்பதாகும். யோவான் காயுவுக்கு நீ இரட்சிக்கப்பட்டு வாழ்ந்திருக்கிறது போலவே இன்னும் இரண்டு காரியங்களில் நீ வாழ்ந்து சுகமா யிருக்க வேண்டுகிறேன் என்கிறார்.

அந்த இரண்டு காரியங்கள் எவை? முதலாவதாக ''எல்லா வற்றிலும் வாழ்ந்து'' என்று யோவான் சொல்லுகிறார். இதற்கு ஆங்கிலத்தில் "Prosper" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. 'Prosperity' என்பதற்கு பொருளாதார செழிப்பு என்று அர்த்தம். அதாவது நீ இரட்சிக்கப்பட்டு வாழ்ந்திருக்கிறாய் அதேபோல் உன் பொருளாதாரத்திலும் நீ வாழ்ந்திருக்க வேண்டு கிறேன் என்கிறார். பொருளாதார ஆசீர்வாதம் விசுவாசிகளுக்கு தேவையில்லை என்று சிலர் கூறுகின்றனர், பிரசங்கிக்கின்றனர். அது தவறு, யோவான் தனது ஆவிக்குரிய மகன் இரட்சிக்கப்பட்டு வாழ் கிறதுபோல அவனது பொருளாதாரத்திலும் அவன் வாழவேண்டும் என்று விரும்புவதாக எழுதுகிறார். தங்களுடைய பொருளாதா ரத்தில் விசுவாசிகள் செழிப்பாக இருப்பது தவறு என்றால் யோவான் காயுவுக்கு அப்படி எழுதியிருக்கக் கூடாதே. பொருளாதார ஆசீர் வாதம் தேவன் நீங்கள் பெறவேண்டும் என்று விரும்பும் ஒரு ஆசீர் வாதமாகும். சிலர் பணம் எல்லா தீமைக்கும் வேராயிற்றே என்கின்றனர். பணம் எல்லா தீமைக்கும் வேர் என்று வேதம் எங்கேயும் சொல்லவில்லை. பண ஆசைதான் எல்லா தீமைக்கும் வேர் என்று வேதம் சொல்லுகிறது. பிரசங்கியின் புத்தகம் பத்தாம் அதிகாரம் பத்தொன்பதாம் வசனத்தில் பணமோ எல்லா வற்றிற்கும் உதவும் என்று வாசிக்கிறோம். நல்லவர்கள் கையில் பணம் இருந்தால் நல்ல காரியங்களுக்கு செலவிடப்படும். தீயோர் கையில் பணமிருந்தால் தீமையான காரியங்களுக்கு செலவிடப் படும். விசுவாசிகள் கையில் பணமிருந்தால் கர்த்தருக்கும் இன்னும் நல்ல காரியங்களுக்கும் பயன்படும். எனவே விசுவாசியே பொருளாதார துறையிலும் நீ வாழ்ந்திருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்பதை உணர்ந்துகொள்.

அடுத்ததாய் யோவான் காயுவுக்கு எழுதும்போது ''சுகமா யிருக்க'' வேண்டுகிறேன் என்கிறார். இது ஆங்கிலத்தில் "health" என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. health என்ற பதத்திற்கு ஆரோக்கியம் என்று அர்த்தம். அதாவது சரீரத்திலும் சுகமாய் ஆரோக்கியத்தோடு நீ வாழ்ந்திருக்க வேண்டுமென்று வேண்டு கிறேன், என்பதாய் யோவான் கூறுகிறார். எனவே வியாதி இல்லாமல் சுகத்தோடு விசுவாசிகள் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்று உணரலாம்.

இந்த வேத வசனத்தில் மூன்று விதமான ஆசீர்வாதங்களைப் பார்க்கிறோம். முதலாவது இரட்சிப்பின் அனுபவமாகிய ஆசீர்

வாதம்இதை Spiritual Blessing எனலாம். அடுத்தது பொருளாதாரத் துறையிலான ஆசிர்வாதம். இதை Material Blessing எனலாம். மூன்றுவது சரீர சுகமாகிய ஆசீர்வாதம். இதை Physical Blessing எனலாம். இந்த மூன்று ஆசிர்வாதங்களையும் தேவன் யாவரும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறுர்.

இதில் முதல் ஆசிர்வாதம் "இரட்சிப்பாகிய ஆவிக்குரிய ஆசிர்வாதமேயாகும். எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும், என்பது தேவனுடைய சித்தம், என்று வேதம் கூறுகிறது.

இந்த முதல் ஆசிர்வாதத்தை பெற்றவர்கள் அதோடு நிறுத்தி விடாமல் அடுத்த இரண்டு ஆசிர்வாதங்களையும் பெற்றுக் கொள்வதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அதனுல்தான் யோவான் காயுவுக்கு எழுதும்போது நீ இரட்சிக்கப்பட்டு உன் ஜீவன் வாழ்ந்திருப்பதுபோல பொருளாதார துறையிலும், சரீர சுகத்தோடும் வாழ்ந்திருக்க வேண்டுகிறேன் என்கிறுர்.

எனவே இரட்சிக்கப்பட்ட நீங்கள் சரீர சுகத்தோடும், பொருளாதார நிறைவோடும் வாழவேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்று அறிந்துகொள்ளுங்கள். பணப் பிரச்சினைக்காகவோ சுகத்திற்காகவோ ஜெபிக்கும்போது ஆண்டவரே! உமக்கு சித்தமானுல் என்று "If" போட்டு ஜெபிக்காதீர்கள், நீங்கள் சுகமாயிருப்பது தேவனுக்கு சித்தம் நீங்கள் பொருளாதார நிறைவோடு வாழ வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். ஏனென்றுல் உங்கள் ஆத்துமா வாழ்ந்திருக்கிறது, அதாவது நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

தேவனுடைய பிள்ளையாகிய நீங்கள் சுகமாயிரா விட்டால் யார் சுகமாயிருக்க முடியும்? தேவனுடைய பிள்ளையான உங்களுக்கு இல்லாமல் வேறு யாருக்குத் தேவன் பொன்னையும் வெள்ளியையும் உலகத்தில் வைத்தார், வெள்ளியும், பொன்னும் தேவனுடையது என்று வேதத்தில் வாசிக்கிறேம். நீங்கள் தேவனுடைய பிள்ளை என்றுல் உங்கள் தகப்பனுடையது உங்களுக்கே. சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய மூன்று ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். **God gives threefold Blessings (1) Spiritual Blessing (2) Material Blessing (3) Physical Blessing.**

தேவன் மூன்றத்தனையான ஆசீர்வாதங்களைத் தருகிறார்.

1. ஆவிக்குரிய ஆசீர்வாதம்—இரட்சிப்பு.
2. பொருளாதார ஆசீர்வாதம்--செல்வம்.
3. சரீர ஆசீர்வாதம்--சுகம்.

பிரியமான இடிமுழக்க வாசக சகோதரனே, சகோதரியே நானும் உன் ஆத்துமா வாழ்கிறதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுகிறேன்.



# ஆவி, ஆத்மா, சரீரம்

உங்களுடைய ஆவி மாத்திரம்தான் மறுபடியும் பிறக்கிறது. உங்கள் அறிவு பணியை செய்கிற ஆத்துமாவோ, உங்கள் சரீரமோ மறுபடியும் பிறக்கவில்லை, என்று சென்ற இதழில் பார்த்தோம்.

இக்கருத்தை நீங்கள் ஒருவேளை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மறுபடியும் பிறந்த நீங்கள் பாவம் செய்கிறீர்களா? என்பதே கேள்வி. மிக மிக இக்கட்டானக் கேள்வியாக இருக்கிறதே, என நீங்கள் நினைகலாம். மறு பிறப்பின் அனுபவத்தை பெற்ற ஒருவரைப் பார்த்து நீங்கள் பாவம் செய்கிறீர்களா? என்று ஒரு தடவை கேட்டபோது உடனே அவர் ''நான் மறுபடியும் பிறந்தவன் நான்பாவமே செய்வதில்லை'' என்றார். பாவமே செய்வதில்லை என்று பொய் சொன்னதே ஒரு பாவமாகும், என்று நான் அவருக்குச் சொன்னேன். ஒன்று யோவான் ஒன்றும் அதிகாரம் எட்டாம் வசனத்தை வாசியுங்கள். நமக்கு பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது என அதில் வாசிக்கிறோம். இவ்வார்த்தைகள் பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டவையே ஆகும். பாவிகளுக்கு அல்ல, இதை எழுதின வரும் பரிசுத்த யோவானே. அவரையும் நம்மோடு சேர்த்துக் கொண்டு நமக்கு பாவமில்லை என்போமானால் என்று அவர் கூறுவதை கவனியுங்கள். எனவே மறுபடியும் பிறந்தவர்கள் பாவம் செய்ய வாய்ப்பு உண்டு என உணரலாம். இதற்குக் காரணம் என்ன? கலாத்தியர் ஐந்தாம் அதிகாரம் பதினேழாம் வசனத்தை வாசியுங்கள்.

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்கிற வைகளை செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கிறதென்று பவுல் கூறுகிறார். காரணம் நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது மறுபடியும் பிறந்திருக்கின்றது. ஆனால் நம்முடைய சரீரமோ அப்படியேதான் இருக்கிறது.

நம்முடைய மாம்சத்தின் கிரியைகளில்தான் விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள்; கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள் என்ற பாவங்கள் சொல்லப்பட்டுள்ளன. நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப் பட்டிருந்தாலும் நமது சரீரம் எந்த மாற்றத்தையும் பெறாததினால்தான் மறுபடியும் பிறந்த நாம் பாவம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. மாம்சத்தின் கிரியைகளாகிய மேற்கண்ட பாவங்களை நம்முடைய சரீரம் இன்னும் மறுரூபமடையாததினால் நாம் செய்து வருகிறோம், இதனால் மறுபடியும் பிறந்தவர்கள் பாவம் செய்வதற்கு அவர்களுக்கு 'லைசன்ஸ்' கொடுக்கப்படுகிறது என்று யாரும் நினைத்துக் கொள்ளாதீர்கள். அப்படி என்றால் மாம்சத்தின் கிரியைகளாகிய இப்பாவங்களை செய்யாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வேதவசன ஆலோசனையை கூறுகிறேன் வாசியுங்கள்.

ஒன்று கொரிந்தியர் ஒன்பதாம் அதிகாரம் இருபத்தேழாம் வசனத்தை எடுத்து வாசியுங்கள். மற்றவர்களுக்கு பிரசங்கிக்கிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன் என்று பவுல் சொல்லுகின்றார். 'கீழ்ப்படுத்துகிறேன்' என்றாலே ஏதோ ஒன்றுக்கு இன்னொன்றை கீழ்ப்படுத்துகிறது என்று அர்த்தமாகிறது, சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன் என்றால் எதற்கு பவுல் சரீரத்தை கீழ்ப்படுத்துகிறார் என்று நீங்களே நிதானிக்கலாம். இங்கே பவுல் தன் சரீரத்தை தன் ஆவிக்கு கீழ்ப்படுத்துகிறேன் என்று சொல்லுகிறார். ஏனென்றால் நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது, நம்முடைய சரீரத்தை நமது ஆவிக்கு நாம் கீழ்ப்படுத்த வேண்டும். விபச்சாரம், வேசித்தனம் என்ற பாவங்களெல்லாம் இந்த சரீரத்தின் கிரியைகளாகத்தான் இருக்கிறது. பவுல் தன் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன் என்று சொல்வதாலேயே அவருடைய சரீரம் மீறுதலை செய்ய முயற்சித்து இருக்கிறது என்று யூகிக்கலாம். இல்லையென்றால் அவர் தன் சரீரத்தை ஒடுக்கியிருக்கத் தேவையில்லையே. எனவே மறுபடியும் பிறந்த நாமும் நம் சரீரத்தை ஒடுக்கி ஆவிக்கு கீழ்ப்படுத்தவேண்டும். ரோமருக்கு எழுதின நிருபம் எட்டாம் அதிகாரம் ஆறும் வசனத்தை வாசியுங்கள். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் என்று அதில் வாசிக்கிறோம். ஏழாம் வசனத்தில் மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள் என்றும் வாசிக்கிறோம்.

மாம்சத்தை ஒடுக்கி ஆவிக்கு கீழ்படுத்துகிற காரியத்தை நாம் தான் செய்யவேண்டும் என்பது மிகவும் முக்கியமான கருத்தாகும், ரோமருக்கு எழுதின நிருபம் பனிரெண்டாம் அதிகாரம் ஒன்றும் வசனத்தை வாசியுங்கள். பவுல் இந்த நிருபத்தை பரிசுத்தவான் களுக்குத்தான் எழுதுகிறார், அதாவது மறுபிறப்பின் அனுபவத்தை உடையவர்களுக்கு எழுதுகிறார், என்ற உணர்வோடு ரோமர் பனி ரெண்டாம் அதிகாரம் ஒன்றும் வசனத்தை வாசியுங்கள்.

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரி சுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தி யுள்ள ஆராதனை என்று அந்நிருபத்தில் பவுல் எழுதுவதாக வாசிக் கிறோம். மறு பிறப்பின் அனுபவத்தை அடைந்தவர்களையே பார்த்து உங்கள் சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக் கொடுங்கள் என்று பவுல் சொல்லுகிறார். மறுபிறப்பின் அனுபவத்தை அடைந் தவர்கள் ஏன் தங்கள் சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். சிந்தியுங்கள், மறுபிறப்பு அடைந்தபோது நமது ஆவி மாத்திரம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது. சரீரம் அப்படியேதான் இருக்கிறது. ஆகவே அதை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தால் தான் பாவங்களின் மேல், மாம்சத்தின் கிரியைகளின் மேல் வெற்றிபெற முடியும். இன்னொரு காரியத்தையும் இதில் கவனிக்க வேண்டும். நாம்தான் நம்முடைய சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமே தவிர, ஆண்டவர் இதை நமக்கு செய்ய மாட்டார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் சரீரங் களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுங்கள் என்று பவுல் கூறுவதை கவனியுங்கள். ஆண்டவர் நமது ஆவியை மட்டும் உயிர்ப்பித்திருக்கிறார். சரீரத்தை நாம்தான் ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த சத்தியத்தை அறியாததினால் தான் இன்னும் அநேகர் பாவத்தின்மேல் ஜெயம் பெறாதவர்களாயி ருக்கிறார்கள்.

இதை செயல்படுத்த மாம்சத்தின் கிரியைகளாகிய பாவத்தின் மேல் வெற்றி பெற உங்கள் சரீரத்தை உங்கள் ஆவிக்கு கீழ் படுத்துங்கள். You must have a control over your body.

சரீரத்தை கீழ்படுத்த நீங்கள் செய்யவேண்டிய ஒரு பயிற்சி தான் உபவாசம். அநேகர் இன்று ஏன் உபவாசிக்க வேண்டுமென்று தெரியாமலேலே உபவாசிக்கிறார்கள். Fasting போட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்கின்றனர். ஏன் உபவாசிக்கவேண்டும் என்பதற்கான ஒரு ஆலோசனையை இக்கட்டத்தில் குறிப்பிட விரும்புகிறேன். உபவாசிக்கும்போது உங்கள் சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்துகிறீர்கள், உங்கள் சரீரம்ஆவிக்கு கீழ்படும்போது ஆவி மேலான நிலைக்கு வருகிறது. உபவாசிக்கும்போது உங்கள் ஆவி மேலான நிலைமைக்கு வருவதால் ஆவியாயிருக்கிற தேவனோடு நீங்கள் நன்ருக உறவாட முடியும் ஐக்கியபட முடியும். மூன்று வேளையும் மூக்குப்பிடிக்க சாப்பிட்டால் தூக்கம்தான் வரும். சில விசுவாசிகளின் திடீரென கோபப்பட்டுவிட்டு பின்னும் அதற்காக வருந்துவார்கள். "திடீரென்று எனக்கு கோபம் வந்துவிட்டது Brother என்னுல் Control பண்ணமுடியாமல் போய்விட்டது Brother" என்பர். முன்னுலேயே தங்கள் சரீரத்தை தங்கள் ஆவிக்கு கீழ்படுத்தி பயிற்சி பெற்றிருப்பார்களென்ருல் அவ்வாறு கோபப்பட்டு இருக்கமாட்டார்கள். கோபம் மாம்சத்தின் கிரியைகளுள் ஒன்று என்பதை கவனியுங்கள், எனவே அது ஒரு பாவமும் கூட.

இதுவரை ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறித்து நான் போதித்தது ஒன்றுமே புரியவில்லை என்று நீங்கள் நினைத்தாலும் கவலைப்படாதிர்கள். தொடர்ந்து வாசியுங்கள். இனிமேலாவது புரியும். வேதவசனம் பகுத்துப் போதிக்கப்பட, போதிக்கப்பட தெளிவு உண்டாகுமே தவிர குழப்பம் உண்டாகாது.

அடுத்ததாய் ரோமர் ஏழாம் அதிகாரத்தை எடுத்து வைத்துக்கொண்டு கவனியுங்கள். ஏழாம் அதிகாரம் பதினைந்தாம் வசனத்தில் எப்படி எனில் நான் செய்கிறது எனக்கே சம்மதி இல்லை. நான் விரும்புகிறதை செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன் என்று பவுல் கூறுகின்ருர். அப்படியென்ருல் ஏன் அவர் தான் விரும்பாததைச் செய்யவேண்டும், பதினேழாம் வசனத்தில் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படி செய்

கிறது என்றுஅவர் அதற்கு பதில்கூறுகிறார். அப்படியென்றால் அந்த பாவம் எங்கு வாசமாயிருக்கிறது? பதினெட்டாம் வசனத்தில் அது ''எப்படியெனில் என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாய் இருக்கிறதில்லை'' என்று அறிந்திருக்கிறேன் என்று பவுல் கூறுவதை கவனியுங்கள். இந்த அதிகாரத்தின் மீதியான வசனத்தை நீங்களே வாசித்து பாருங்கள். இக்குறிப்புகளினால் நம்முடைய சரீரம் இன்னும் மாறவில்லையென்றும் சரீரத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்றும், நாம்தான் நம்முடைய சரீரத்தை ஒடுக்கி நமது ஆவிக்கு கீழ்ப்படுத்த வேண்டும் என்றும் நிதானிக்கலாம்.

# ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம்

பரிசுத்த வேதாகமத்தில் 3 விதமான ஸ்நானங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன என்று கடந்த இதழ்களில் பார்த்திருக்கிறோம் முதலாவது கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக்கப்படுகிற ஞானஸ் நானம். "Baptism into the body of Christ". இரண்டாவது ஜலத் திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம். "Baptism into water". மூன்றாவது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம். "Baptism in the Holy spirit" முதல் 2 ஞானஸ்நானங்களைக் குறித்து கடந்த இதழ்களில் பார்த்திருக்கிறோம். 3வது ஞானஸ்நானத்தைக் குறித்து இந்த இதழில் பார்க்கப் போகிறோம்,

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிறதைக் குறித்து லூக்கா எழுதின சுவிசேஷம் 3ம் அதிகாரத்தில் 16ம் வசனத்தில் யோவான் "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினா லும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று கூறுவதாக வாசிக்கிறோம். எனவே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பின்தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவம் நமக்குக் கிடைத்தது என்று நாம் அறியலாம்.

முதல் ஞானஸ்நானமாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக் கப்படுகிற ஞானஸ்நானம்தான் நம்மை இரட்சிக்கிறதென்று முன்னல் பார்த்தோம். சிலர் அது மாத்திரம் போதும், என்று பிரசங்கிக்கின்றனர் நீங்கள் இரட்சிக்கப்பட்டபோதே, மறுபடி யும் பிறந்த போதே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து விட்டார். அதே போதும் என்று சில சபைகளின் உபதேசங்கள் கூறுகின்றன. மறுபிறப்பின் அனுபவத்தை நாம் பெறும்போது நமது ஆவியில் பரிசுத்த ஆவியானவர்தான் கிரியை செய்து அதை

புது சிருஷ்டியாக்குகிறார், என்பது சரியே. ஆனால் அதற்கு பின்னதாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டு மென்ற ஒரு அனுபவத்தையும் வேதம் நமக்கு தெரிவிக்கின்றது. எனவே, இரட்சிக்கப்படுவது மாத்திரம் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்குப் போதாது. அடுத்த அனுபவமாகிய பரிசுத்த ஆவி யினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவத்திற்கும் நீங்கள் கடந்து வரவேண்டும்.

அப்போஸ்தலர் நடபடிகளின் 8ம் அதிகாரத்தில் சொல்லப் பட்டுள்ள சம்பவம் மேற்சொன்ன கருத்தை உங்களுக்கு தெளிவாக் கும். பிலிப்பு என்ற சுவிசேஷகர் சமாரியாவிலே போய் பிரசங் கிக்கிறார். அற்புதங்கள் நடக்கின்றன. பிலிப்புவின் பிரசங்கத்தை சமாரியர் கேட்டபோது, விசுவாசித்து புருஷரும் ஸ்திரிகளும் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். அதாவது அவர்கள் விசுவாசித்தபோது கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக்கப் படுகிற ஞானஸ்நானத்தை முதலில் பெறுகிறார்கள். அடுத்ததாய், ஜலத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தையும் பெறுகிறார்கள். இதோடு சம்பவம் முடியவில்லை. சமாரியாவில் நடந்த எழுப்பு தலை அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும், யோவானையும் சமாரியாவிற்கு அனுப்புகிறார்கள். இச்சம்ப வங்களைக் குறித்து நன்றாய் அறிய 8ம் அதிகாரம் முழுவதையும் வாசியுங்கள். பேதுருவும், யோவானும் சமாரியாவிற்கு வந்த போது சமாரியாவில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்று இருந்தவர்களாக கண்டு அவர்களுக்காய் ஜெபம் பண்ணி அவர்களின் மேல் கைகளை வைத்தபோது சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம் சமாரியர் பிலிப்புவின் சுவிசேஷ பிரசங்கத்தை கேட்டு இரட்சிக்கப் பட்டபோதே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று இருப்பார்கள் என்றால் பேதுருவையும் யோவானையும் எதற்கு அப்போஸ்தலர்கள் சமாரியாவிற்கு அனுப்ப வேண்டும் கிறிஸ்து வுக்குள்ளாக்கப்படுகிற ஞானஸ்நானத்தையும் ஜலத்திற்குள்ளாக் கப்படுகிற ஞானஸ்நானத்தையும் பெற்ற சமாரியர் பரிசுத்த ஆவி யினாலும் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்பதற்காகவே அப்போஸ்தலர்கள் சமாரியாவிற்கு அனுப்பப்படுகின்றனர் அவ்வாறே சமாரியரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்கிறார்கள். சமாரியர் 3 ஞானஸ்நானங்களையும் பெற்றார்கள் என்பதைக் கவனியுங்கள் பிலிப்பு பிரசங்கித்த, சுவிசேஷத்தை அவர்கள் விசுவாசித்தபோது கிறிஸ்துவின் சரீரத்

திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள், அப்படி விசுவாசித்தவர்கள் பிலிப்புவினால் ஜலத்திற்குள்ளாக்கப்படுகிற ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். பேதுருவும், யோவானும் சமாரியாவிற்கு அனுப்பப்பட்டபோது பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டார்கள். எனவே, இந்த 3 ஞானஸ்நானங்களும் வெவ்வேறானவை என்பதைப் புரிந்து கொள்ளலாம். மறுபிறப்பின் அனுபவத்தை மாத்திரம் அடைந்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறாதவர்களுக்குள் பரிசுத்த ஆவியே கிடையாது என்று அர்த்தம் இல்லை. மறுபிறப்பின் அனுபவமே பரிசுத்த ஆவியானவரின் கிரியைதானே. எனவே மறுபிறப்பின் அனுபவத்தை அடைந்தவர்களுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் உண்டு என நீங்களே நிதானிக்கலாம். மறுபிறப்பின் அனுபவத்தை அடைந்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் என்ற நிச்சயம் அவர்களுக்கு இருக்கிறது. இதனால்தான் பவுல் ரோமருக்கு எழுதும்போது 8ம் அதிகாரத்தில் 16ம் வசனத்தில் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார் என்று கூறுகிறார். எனவே, மறுபிறப்பின் அனுபவத்தை அடைந்த தேவனுடைய பிள்ளைகள் எல்லோருக்குள்ளும் தேவ ஆவியானவர் உண்டென்று அறிந்து கொள்ளுங்கள். ஆனால் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவம் இதற்கு அடுத்த உயர்ந்த அனுபவமாகும். இக்கருத்தை இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளின்படி இன்னும் தெளிவாய் நாம் உணரலாம்.

யோவான் எழுதின சுவிசேஷத்தில் 4ம் அதிகாரத்தில் 14ம் வசனத்தில் சமாரிய ஸ்திரியிடம் இயேசுகிறிஸ்து "நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகம் உண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கக் கூடிய தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீர் ஊற்றாய் இருக்கும்" என்கிறார். இயேசுகிறிஸ்து இந்த இடத்தில்குறிப்பிடுகிற தண்ணீர் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. இங்கே இயேசுகிறிஸ்துவினால்" சொல்லப்படுகிற அனுபவம் ஒரு நீரூற்றுக்கு இணையாக சொல்லப்படுகிறது.

யோவான் எழுதின சுவிசேஷம் 7ம் அதிகாரத்தில் 38ம் வசனத்தில் "என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீர் உள்ள நதிகள் ஓடுமென்று" இயேசு கூறுகிறார். இங்கே சொல்லப்பட்டுள்ள அனுபவமானது

நதியில் ஓடுகிற தண்ணீருக்கு இணையாக சொல்லப்பட்டுள்ளது. 31ம் வசனத்தில் "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படி சொன்னார். இயேசு மகிமைப்படா திருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்று வாசிப்பதால் இங்கே சொல்லப்பட்டுள்ள அனுபவம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவமாகும் என்று தீர்மானிக்கலாம்.

யோவான் 4ம் அதிகாரத்தில் சமாரிய ஸ்திரியிடம், பரிசுத்த ஆவியினால் நாம் பெறுகிற மறுபிறப்பின் அனுபவத்தை இயேசு கிறிஸ்து கூறுகிறார். யோவான் 7ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவத்தை இயேசு கூறுகிறார்.

அதாவது சமாரிய ஸ்திரியிடம் பேசும்போது பரிசுத்த ஆவி யினால் நாம் பெறுகிற மறுபிறப்பின் அனுபவத்தை கூறி அதை ஒரு நீரூற்றுக்கு ஒப்பிடுகிறார். அதாவது ஒரு கிணற்றிற்கு ஒப்பிடு கிறார். ஆனால் யோவான் 7ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிற அனுபவத்தை கூறி அதை ஒரு நதிக்கு ஒப்பிடுகிறார்.

கிணற்றில் உள்ள தண்ணீர் அந்த வீட்டாருக்கு மாத்திரமே பயன்படும். கிணற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரமே பயன் படும். நதியில் ஓடுகிற ஜலம் எல்லா ஜனங்களுக்கும் பயன்படும். நதியில் ஓடுகிற ஜலம் எல்லா ஜனங்களுக்கும் பயன்படும். எனவே, நதியில் ஓடுகிற ஜலத்திற்கு ஒப்பான பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை ஏன் பெற்றுக் கொள்ள வேண்டும்? இதற்கான பதிலை அப்போஸ்தலர் நடபடி களின் முதல் அதிகாரத்தில் 8ம் வசனத்தில் இயேசுகிறிஸ்துவே சொல்கிறார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள்

பலனடைவீர்கள் என்று இயேசுகிறிஸ்து சொல்கிறார். இது ஆங்கிலத்தில் "You shall receive power" என்றிருக்கிறது. அதாவது பரிசுத்த ஆவியின் நிறைவை நீங்கள் பெற்றுக்கொள்ளும்போது வல்லமையைப் பெற்றுக்கொள்கிறீர்கள். அதிகாரத்தை பெற்றுக் கொள்கிறீர்கள். இதற்காகதான் பரிசுத்த ஆவியின் நிறைவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த வல்லமையைக் குறித்த விளக்கங்களைப் பின்னால் பார்ப்போம். ஆனால் இப்போதைக்கு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதன் நோக்கம் வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்காகவே என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறேன் என்று சொல்கிறவர்களிடத்தில் கனி இல்லையே என்று சிலர் குறை கூறுவதுண்டு. முக்கியமாய் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளாத சில சபையினர் பரிசுத்த ஆவியைப் பெற்ற பெந்தகோஸ்தே அனுபவம் உள்ளவர்களைப் பார்த்து இவ்வாறு சொல்வதுண்டு. **பரிசுத்த ஆவியின் நிறைவு கனி கொடுப்பதற்காக கொடுக்கப் படுவதில்லை.** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்று சொல்கிறார். எனவே, ஆவியின் கனிகளைக் கொடுக்க நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானாதைப் பெறும்போது நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்து இருக்க ஆரம்பிக்கிறீர்களா? அல்லது முதல் ஞானஸ்நானமாகிய கிறிஸ்துவின் சாரத்திற்குள்ளாக்கப்படுகிற ஞானஸ்நானத்தின்போது கிறிஸ்துவில் நிலைத்து இருக்க ஆரம்பிக்கிறீர்களா என்பதை சிந்தியுங்கள். கிறிஸ்துவின் சாரத்திற்குள்ளாக்கப்படுகிற ஞானஸ்நானத்தின் அனுபவத்தை நீங்கள் பெற்றதிலிருந்தே நீங்கள் கனி கொடுக்க முடியும். ஏனென்றால் நீங்கள் அவரிலும் அவர் உங்களிலும் நிலைத்திருக்கக்கூடிய இணைப்பு அப்போதே ஏற்பட்டு விடுகிறது. இந்த கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கக்கூடிய அனுபவத்தை பெற்றவர்கள்தான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்' எனவே, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பெறுவதற்கு முன்பே

நீங்கள் கனி கொடுக்கலாம், என அறிந்து கொள்ளுங்கள். அப்படி என்றால் பரிசுத்த ஆவியினால் எதற்காய் ஞானஸ்நானம் பெற வேண்டும்? முன்னால் பார்த்ததுபோல வல்லமைக்காய் தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அப்படியென்றால் ஆவியின் கனி கொடுப்பது எதற்காய்? கலாத்தியர் 5ம் அதிகாரத்தில் 22, 23ம் வசனங்களில் அன்பு சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகளை ஆவியின் கனி என்று வாசிக்கிறோம். எனவே, ஆவியின் கனி என்பது பரிசுத்த வாழ்க்கைக்காக என நீங்கள் தீர்மானிக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது வல்லமையை பெற்றுக்கொள்வதற்காக.

**‘‘Fruit of the spirit is for holiness.**
**Baptism of the Holyspirit is for power.**

# ஆதியிலே

''பின்பு தேவன் பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் ஜாதி ஜாதியாக பிறப்பிக்கக் கடவது'' என்றார். அது அப்படியே ஆயிற்று.

மேற்கண்ட வார்த்தைகளை ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் 24ம் வசனத்தில் வாசிக்கிறோம். தேவன் தமது 6வது நாளின் கிரியைகளை செய்கிறதை மேற்கண்ட வசனம் குறிக்கிறது 6வது நாளின் படைப்பில் முதலில் மிருகங்களும், ஊரும் பிராணிகளும் உண்டாக்கப்படுகின்றன. 6வது நாளின் படைப்பில் பின்னால் மனிதன் உருவாக்கப்படுகிறான். 6வது நாளில் முதலில் 3 வகையான உயிரினங்கள் உருவாக்கப்படுவதாக பார்க்கிறோம். முதலாவதாக நாட்டு மிருகங்கள் உண்டாக்கப்படுகின்றன. இவை வீடுகளில் வளர்க்கப்படுகிற மிருகங்களைக் குறிக்கிறது ஆங்கிலத்தில் domestic animals என்றுஇதைச் சொல்லலாம். இரண்டாவதாய் காட்டு மிருகங்கள் உண்டாக்கப்படுகின்றன. இது வன விலங்குகளைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் இவற்றை wild animals என கூறலாம். மூன்ருவதாய் ஊரும் பிராணிகள் என்பது தரையில் ஊர்ந்து செல்லக்கூடிய எல்லா உயிரினங்களையும் குறிக்கிறது. இந்த 3 வகையான உயிரினங்களும் ஒரே நாளில் உருவாக்கப்பட்டன என்பதை கவனிக்க வேண்டும். டார்வினுடைய பரிணாமக் கொள்கை கூறுவது போல பல வருட இடைவெளி இந்த உயிரினங்களின் படைப்பிற்கு நடுவே கிடையாது.

மேற்கண்ட உயிரினங்கள் உண்டாக்கப்படுவதற்கு **'பூமியானது இவைகளை பிறப்பிக்க கடவது'** என்று தேவன் சொல்வதாக வேதத்தில் வாசிக்கிறோம். பூமியில் என்னென்ன மூலகங்கள் உள்ளனவோ அவைகள் சேர்ந்துதான் இந்த உயிரினங்களின் சரீரமாக மாறியுள்ளது. இப்போதும், பூமியின் மண்ணிலுள்ள அதே மூலகங்கள் உயிரினங்களின் சரீரத்திலும் இருப்பது விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலமாய் தெரிய வருகிறது. எனவேதான், இவை

களை தேவன் உண்டாக்கும்போது, பூமியானது இவைகளை பிறப்பிக்கக் கடவது என்று கூறுகிறார். மேலும் இந்த உயிரினங்கள் மரிக்கும்போதும் அவற்றின் சரீரம் பூமிக்கு திரும்ப அவை மண்ணாகின்றன.

"தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டு மிருகங்களையும் ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும் பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லது என்று கண்டார்'' என 25ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

மேற்கண்ட வசனத்தில் தேவன் இந்த உயிரினங்களை **உண்டாக்கினாரென்று** வாசிக்கிறோம். ஆனால் 5வது நாளிலே பறவைகளையும் மீன்களையும் தேவன் **சிருஷ்டித்தார்** என்று 21ம் வசனத்தில் வாசிக்கிறோம். **உண்டாக்கினார்** என்ற வார்த்தைக்கு ஆசா (Asah) என்ற எபிரேய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை 6வது நாளின் படைப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் **சிருஷ்டித்தார்** என்ற வார்த்தைக்கு பாரா (Bara) என்ற எபிரேய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரா என்ற எபிரேய வார்த்தை 5வது நாளின் படைப்பிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 5வது நாளில் தேவன் உயிரினங்களை **சிருஷ்டித்தார்.** 6வது நாளில் மிருகங்களை **உண்டாக்கினார்.** ஏன் இந்த வித்தியாசம் ¿

5வது நாளிலே தேவன் பறவைகளையும் மிருகங்களையும் உருவாக்கும்போது அவைகளை soul எனப்படும் ஆத்துமாவை உடையதாக உருவாக்கினாரென்று சென்ற இதழில் பார்த்தோம். இந்த soul என்ற பதத்திற்கு Nephesh என்ற எபிரேய வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த Nephesh என்ற வார்த்தை ஆதியாகமத்தில் 5வது நாளின் சிருஷ்டிப்பைக் கூறும் போதுதான் முதல் முதலாக வருகிறது. எனவே, இந்த soul என்ற ஆத்துமா 5ம் நாளில்தான் உருவாக்கப்பட்டதென அறியலாம். இந்த, ஆத்துமாவையுடைய, பறவைகளையும் மச்சங்களையும் தேவன் 5வது நாளில் உருவாக்குகிறார். இதற்கு முன்னதாக உருவாக்கப்பட்ட மரம், செடி, கொடிகள், இவற்றிற்கு soul கிடையாது.

6வது நாளில் மிருகங்கள் உருவாக்கப்பட தேவனுக்கு இரண்டு காரியங்கள் தேவையாய் இருந்தது. ஒன்று, மிருகங்களின் சரீரத்தை

உருவாக்க பூமியின் மண் தேவையாய் இருந்தது. ஏனென்றால் மண்தான் மிருகங்களின் சரீரமாக மாறி உள்ளது. இரண்டாவது soul எனப்படும் ஆத்துமாவும் தேவையாயிருந்தது. எனவே, மிருகங்களை உருவாக்க மண்ணும், soul எனப்படும் ஆத்துமாவும் தேவையாய் இருந்து இருக்கிறது. பூமியின் மண்ணானது முதல் நாளிலேயே உருவாக்கப்பட்டு விட்டது. soul எனப்படும் ஆத்துமாவானது 5வது நாளிலேயே உருவாக்கப்பட்டு விட்டது. இவ்விரண்டையும் சேர்த்து 6வது நாளிலே தேவன் மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் **உண்டாக்குகிறார், சிருஷ்டிக்கவில்லை, உண்டாக்குகிறார்.** அதாவது முதல் நாளில் தாம் சிருஷ்டித்த பூமியின் மண்ணைக் கொண்டும் 5வது நாளில் தாம் சிருஷ்டித்த soul என்னும் ஆத்துமாவைக் கொண்டும் 6வது நாளின் மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் தேவன் உண்டாக்குகிறார்.

"பின்பு தேவன் **நமது** சாயலாகவும் **நமது** ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக'; என்று சொல்வதாக 26ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

மேற்கண்ட வசனத்தில் **நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும்** என்ற தேவன் தம்மை **பன்மையில்** அழைத்துக் கொள்வதை கவனியுங்கள். மேலும் இதற்கு முந்தின நாட்களின் படைப்புகளின்போது **வெளிச்சம் உண்டாகக் கடவது, சுடர்கள் உண்டாகக் கடவது** என்று சொன்ன ஆண்டவர் மனிதனை உருவாக்கும்போது மாத்திரம் தனக்குள் அல்லது தனக்கே **'மனுஷனை உண்டாக்குவோமாக'** என்று சொல்லிக் கொள்கிறார். எனவே மனிதனை அவர் படைத்ததற்கும், மற்ற உயிரினங்களைப் படைத்ததற்கும் ஒரு வித்தியாசத்தை நாம் உணரலாம்.

தமது சாயலாக மனிதனை உருவாக்க வேண்டுமென்று தேவன் தீர்மானிக்கிறார் என்று வேதத்தில் பார்க்கிறோம். அப்படியென்றால் இதுவரை அவர் படைத்த எந்த உயிரினமும் அவரின் சாயலில் உருவாக்கப்படவில்லையென்று நாம் அறியலாம். ஏனென்றால் தமது சாயலாக மிருகங்களையோ பறவைகளையோ அவர் உருவாக்கினதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. அப்படியென்றால் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள ஒரே சாயல் எது? மிருகங்களின் சரீரமும் மனிதனின் சரீரமும் மண்ணிலிருந்தே உருவாக்கப்படுகிறது. மண் முதல் நாளிலேயே உருவாக்கப்பட்டு விட்டது. இந்த மிருகங்களுக்குள்ளும் மனிதனுக்குள்ளும்

இருக்கும் ஆத்துமாவும் 5வது நாளிலேயே சிருஷ்டிக்கப்பட்டு விட்டது. எனவே, **சரீரமோ ஆத்துமாவோ** தேவனின் சாயலில் இல்லையென்று நாம் உணரலாம். ஏனென்றால் மிருகங்களுக்கும் சரீரமும், ஆத்துமாவும் இருக்கிறது. ஆனால் அவை தேவனின் சாயலாக உருவாக்கப்பட்டதாக வேதம் கூறவில்லை. அப்படி யென்றால் தேவனின் சாயலாக இருப்பது எது? அது மனிதனு டைய ஆவியேயாகும். தேவன் ஆவியாய் இருக்கிறார் என்று வேத வசனம் கூறுகிறது. அவரின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனித னுக்குள்ளும் ஆவியை தேவன் உருவாக்குகிறார். இதைக்குறித்து ஆதியாகமத்தில் 2ம் அதிகாரத்தில் இன்னும் தெளிவாக பார்க்க லாம் முதல் நாளிலே உயிரினங்களின் சரீரத்தை உருவாக்கத் தேவையான **மண்ணை** தேவன் சிருஷ்டிக்கிறார். 5வது நாளிலே உயிரினங்களுக்குள்ளிருக்கும் **ஆத்துமாவை** சிருஷ்டிக்கிறார். 6வது நாளிலே மனிதனுடைய **ஆவி** முதல் முதலாய் சிருஷ்டிக்கப்படு கிறது. முதல் நாளிலே தாம் சிருஷ்டித்த பூமியின் மண்ணை கொண்டும் 5ம் நாளில் சிருஷ்டித்த ஆத்துமாவைக் கொண்டும் மனிதனை உண்டாக்கி அவனுக்குள் அவனது ஆவியையும் சிருஷ்டிக் கிறார். மனிதனை படைக்கும்போது **உண்டாக்குதலும்** இருந்தது. **சிருஷ்டித்தலும்** இருந்தது. எனவேதான் 26ம் வசனத்தில் மனுஷனை உண்டாக்குவோமாக என்று தேவன் சொல்வதாகவும், 27ம் வசனத்தில் மனிதனை சிருஷ்டித்தார் என்றும் வாசிக்கிறோம் எபிரேய மொழியில் சொன்னால் **ஆசாவும், பாராவும்** இருந்தது. "Lord both made and created man". மனிதனுடைய சரீரம் உண்டாக்கப்பட்டது. அவனுடைய ஆவி சிருஷ்டிக்கப்பட்டது.

மனிதன் என்ற பதம் **'ஆதாம்'** என்பதைக் குறிக்கிறது. எபிரேய மொழியில் **ஆதாம்** என்றால் மண்ணுக்குச் சொந்த மானவன் என்று அர்த்தம். அதாவது மண்ணில் இருந்து எடுக்கப் பட்டவன் என்று மாத்திரமல்ல, மண்ணையும் ஆள அதிகாரம் பெற்றவன் என்றும் அர்த்தமாகிறது. 26ம் வசனத்தில் சமுத்திரத் தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும் மிருக ஜீவன் களையும் **பூமியனைத்தையும் ஆளக் கடவர்கள்** என்று பூமியின் மண்ணின் மேலும் தேவன் மனிதனுக்கு அதிகாரத்தை கொடுப் பதை கவனியுங்கள்.

"பின்பு தேவன் அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும் பூமியின் மேல் நடக்கின்ற சகல ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."

மேற்கண்ட வசனத்தில் 3 கட்டளைகளை மனிதனுக்கு கொடுப்பதாகப் பார்க்கலாம், முதலாவது பலுகிப் பெருகுங்கள். இரண்டாவது பூமியை நிரப்புங்கள். மூன்றாவது. பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் கீழ்படுத்தி ஆண்டுகொள்ளுங்கள். உயிரினங்களை உருவாக்கும்போது ஆண் பெண் இனத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவைகளை உருவாக்கின ஆண்டவர் மனித வர்க்கத்தை சிருஷ்டிக்கும்போது ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் மாத்திரம் உருவாக்கி அவர்களை பலுகிப் பெருகச் சொல்கிறார்.

''பின்னும் தேவன் இதோ பூமியின்மேல் எங்கும், விதை தரும் சகலவித பூண்டுகளையும். விதை தரும் கனி மரங்களாகிய சகல வித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு ஆகாரமாக கடவது'' என்று கூறுவதாக 29ம் வசனத்தில் வாசிக்கிறோம். இதிலிருந்து மனிதனுக்கு தேவன் வெஜிடேரியன் உணவைத்தான் முதலில் கொடுக்கிறார் என்று உணரலாம். அதேபோல மற்ற உயிரினங்களுக்கும் பசுமையான சகல வித பூண்டுகளையும் ஆகாரமாக கொடுத்தார் என்று தேவன் சொல்வதாக 30ம் வசனத்தில் வாசிக்கிறோம். எனவே, சிங்கம் உட்பட எல்லா உயிரினங்களுமே ஆரம்பத்தில் சுத்த சைவமாகவே தான் இருந்திருக்கின்றன, அதனால்தான் தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தபோது அது மிகவும் நன்றாய் இருந்தது என்று 31ம் வசனத்தில் வாசிக்கிறோம். சிங்கம் மாட்டை அடிக்கவில்லை. புலி மானைத் துரத்தவில்லை, ஓநாய் ஆட்டுக் குட்டியை தூக்கிக்கொண்டு ஓடவில்லை. எல்லாம் சுமுகமான வாழ்க்கை நடத்தின. எல்லாவற்றின் மேலும் மனிதனுக்கு அதிகாரம் இருந்தது.

சாயங்காலமும் விடியற்காலமுமாகி 6ம் நாள் ஆயிற்று. தொடர்ந்து அடுத்த இதழில் பார்ப்போம்.

# சாட்சிகள்

**சாட்சி எண் 9**

சார்லஸ் பாபேஜ் (Charles Babbage)

**1792—1871**

இவர் ஒரு கணித விஞ்ஞானி. Acturial Table ஐ முதல் முதலில் இவர்தான் உருவாக்கினார். மேலும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் ஸ்பீடா மீட்டரை கண்டுபிடித்தவரும் இவரே. கண் டாக்டர்கள் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படுத்தும் Opthalmoscope என்ற கருவியைக் கண்டுபிடித்தவரும் இவரே. இருட்டறையில் உட்கார வைத்துவிட்டு உங்கள் கண்ணுக்கு மிக அருகே ஒரு கருவியை வைத்துக்கொண்டு கண் டாக்டர் உங்கள் கண்ணுக்குள்ளே பார்த்து பரிசோதனை செய்கிறாரே அதுதான் ஆப்தால்மோஸ்கோப். மேலும் முதல் முதலில் ஓடுகின்ற ஒரு வாகனத்தை கண்டுபிடித்தவரும் இந்த சார்லஸ் பாபேஜ்தான்,

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது பரவலாக எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படும் தானாகவே இயங்கும் கணக்கு போடும் கருவியைக் கண்டு பிடித்தவரும் இவரே. இதைக் கால்குலேட்டர் என்று அழைக்கிறோம். எனவே கணக்கீட்டுப் பொறிகளின் தந்தை என்று இவர் கருதப்படுகிறார். ஆனால் இவர் படிக்கும்போது பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகவே போக மாட்டாராம். இதை வாசித்துவிட்டு இடிமுழக்க மாணவ வாசகர்கள் பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போட்டு விடாதீர்கள். ஆனால் சார்லஸ் பாபேஜ் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காய் சேர்ந்தபோது அங்கிருந்த ஆசிரியர்களைவிட சார்லஸ் பாபேஜிற்கு அதிகம் அல்ஜிப்ரா தெரிந்து இருந்ததாம். (மாணவச் செல்வங்களே, உங்கள் நிலை எப்படி?)

இன்றைய நவீன கம்ப்யூட்டர்கள் உருவாக்கப்பட இவர் செய்த ஆராய்ச்சிகள்தான் அடிப்படையாக இருக்கின்றன. இன்றைய கம்ப்யூட்டர்களுக்கு இவர்தான் காரணமானவர்.

கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படும் குறியீட்டு கார்டுகளைக் குறித்தும் கம்ப்யூட்டர்களில் தகவல்களை சேர்த்து வைப்பதைக் குறித்தும் இவர்தான் கண்டுபிடித்தார். இந்த முறைகளை Punch Card Direction என்றும் Information Storage என்றும் அழைக்கின்றனர். இந்த கம்ப்யூட்டர்களைக் கண்டுபிடிக்க காரணமாய் இருந்த சார்லஸ் பாபேஜிற்கு, பின்னால் அந்திக் கிறிஸ்து இந்த கம்ப்யூட்டர்களை பயன்படுத்துவான் என்பதுதான் தெரியாமல் போய்விட்டது.

இவ்வளவையும் கண்டுபிடித்த சார்லஸ் பாபேஜ் நல்ல ஒரு விசுவாசி. இடிமுழக்க மாணவ வாசகர்கள் கவனியுங்கள். உங்களைப் போல விசுவாசியான சார்லஸ் பாபேஜின் ஞானத்தை தேவன் உங்களுக்கு தர வல்லவராய் இருக்கிறார். கிறிஸ்தவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராக இருந்த சார்லஸ் பாபேஜ் கிறிஸ்தவத்தின் ஆதாரச் சான்றுகள் என்ற தலைப்பில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அது மாத்திரமல்லாமல் கணித முறையைக் கொண்டு வேதத்தின் அற்புதங்களை ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவை Bridge Water Treatiises என்று அழைக்கப்படுகின்றன. சார்லஸ் பாபேஜின் சாட்சிக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## சாட்சி எண் 10

## மைக்கேல் பாரடே (Michael Faraday)

## 1791—1867

இவர் ஒரு சிறந்த பௌதீக விஞ்ஞானி. மின்சாரம், காந்தம் போன்ற பல அமைப்புகளில் ஆராய்ச்சிகளை இவர் செய்துள்ளார். மின்வெட்டு ஏற்பட்டால் தேவைப்படுகிற மின்சார ஜெனரேட்டரை கண்டு பிடித்தவர் இவர்தான். இவருடைய பெயரில் இரண்டு அடிப்படை அளவுகள் அழைக்கப்படுகின்றன. இதை Basic units என்று அழைப்பர். Electrolysis ல் ஒன்றும் Electrostratics-ல் ஒன்றும் இவ்வாறு அழைக்கப்ப்டுகிறது. Electrolysis-ஐ கண்டு பிடித்தவரும் இவர்தான். e.m.f. விசையை இவர்தான் விளக்கினார். சக்திக்கும் ஜடப் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பையும் இவர் விளக்கினார்.

இவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவரது குடும்பம் மிகவும் பக்தியான குடும்பம். பரிசுத்த

வேதாகமத்திலும் ஜெபத்திலும் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர் மைக்கேல் பாரடே. பரிசுத்த வேதாகமமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல என்பது இவருடைய கருத்து. ''மனிதனால் ஒன்றும் கூட்டப்படாததும் ஒன்றும் குறைக்கப்படாததும் ஆன பரிசுத்த வேதாகமம் மாத்திரமே எல்லா காலத்திற்கும் எல்லா சூழ்நிலைகளுக்கும் ஒவ்வொரு மனிதனுக்குமான வழிகாட்டி. கிறிஸ்துவின் தெய்வீகத்திலும் அவரது இரட்சிப்பின் பணியிலும் உண்டாகிற விசுவாசம் தேவன் நமக்கு தரும் ஒரு வரமாகும். கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதே கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்திற்கு அடையாளம் ஆகும்'' என்பது மைக்கேல் பாரடே நம்பியிருந்த அவரது சபையின் கொள்கையாகும்.

பல விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக்கு எல்லாம் காரணமான மைக்கேல்பாரடே லண்டனில் இருந்த ஒரு சிறிய சபையில் பிரசங்கியாராய் இருந்து வந்தார். இவரது பிரசங்கங்களில் 150 பிரசங்கங்கள் வெளியிடப்பட்டிருக்கினவாம். மைக்கேல் பாரடேவின் சாட்சிக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## சாட்சி எண் 11
## ஹம்ப்ரி டேவி (Humprhey Davy)
## 1778—1829

இவர் ஒரு இரசாயன விஞ்ஞானி. இவரின் கீழ்தான் மைக்கேல் பாரடே அப்ரெண்டிஸ் ஆகப் பணியாற்றி இருக்கிறார். பல இரசாயன மூலகங்களை முதலில் பிரித்தவர் ஹம்ப்ரி டேவிதான். வெப்பத்தின் சுழற்சி விதியை கண்டு பிடித்தவர் இவர்தான். இது Motion Theory of Heat என்று அழைக்கப்படுகிறது. கரிதான் வைரமாக மாறியிருக்கிறது என்று நிரூபித்தவரும் இவர்தான். இவர் சுரங்கங்களில் தேவைப்படுகிற பாதுகாப்பு விளக்கை கண்டுபிடித்தார் அந்த விளக்கு டேவியின் விளக்கு (Davy's Lamp) என்று அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக்கு காரணமானவரான ஹம்ப்ரி டேவி பரிசுத்த வேதாகமம் ஆதாரப் பூர்வமானது என்று நம்பினவர். அவர் ஆழ்ந்த ஒரு கிறிஸ்தவ விசுவாசி ஆவார். ஹம்ப்ரி டேவியின் சாட்சிக்காய்தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## சாட்சி எண் 12

## வெர்னர்வான் பிரான் (Werner Von Braun)

## 1912—1977

இவர் நம்முடைய காலத்தை சேர்ந்தவர் என்பதை கவனியுங்கள். நமது நாட்களில் ராக்கெட் வேகத்தில் வளர்ந்துள்ள வானவெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகளுள் Werner Von Braun மிக முக்கியமானவராவார். பெர்லின் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. பட்டம் பெற்ற இவர் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த ராக்கெட் இன்ஜினியர் ஆவார். 2-வது உலக மகா யுத்தத்தின்போது V-2 ராக்கெட்டுகளை இவர்தான் உருவாக்கினார். 1945-ல் அமெரிக்கா சென்று இவர் அமெரிக்க பிரஜையானார். அங்கு நாசா (NASA) ஸ்தாபனத்தின் ஆராய்ச்சிக்கே வித்திட்டவர், இவர்தான்.

கிறிஸ்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் தனது சபையில் பல பொறுப்புகளை ஏற்று பணி புரிந்து இருக்கிறார். ''மனிதர்கள் வானவெளி கலங்களில் பறப்பது ஒரு சாதனையாகும். ஆனால் இந்த வானவெளி ஆராய்ச்சி மனித சமுதாயம், அளவிட முடியாத வானவெளியைக் காண்பதற்கு ஒரு சிறிய கதவை திறந்து உள்ளது. இந்த சிறிய கதவின் வழியாக வானவெளியின் அளவிட முடியாத ரகசியங்களைப் பார்க்கும்போது இவற்றை எல்லாம் படைத்த சிருஷ்டிக் கர்த்தாவின் மேல் நமக்குள்ள நம்பிக்கை உறுதிப்படுகிறது. எப்படி ஒரு கிறிஸ்தவ போதகர் விஞ்ஞானம் வளரவில்லை என்று சொன்னால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதோ அதே போல ஒரு விஞ்ஞானி இவ்வுலகத்தை எல்லாம் உருவாக்கின ஆண்டவர் ஒருவர் இல்லையென்று சொல்வதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது'', என்பது வெர்னர்வான் பிரானின் கருத்து. வானவெளி ஆராய்ச்சி மனிதனை சந்திரனில் இறக்கிவிட்டதால் கடவுளே இல்லையென்று சொல்கிறவர்கள் வானவெளி ஆராய்ச்சிக்கு வித்திட்ட விஞ்ஞானியின் வார்த்தைகளை கவனியுங்கள். வெர்னர்வான் பிரானின் சாட்சிக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்.



# கெமாட்டீரியா ஜாக்கிரதை

"இன்னொரு புதிய பெயரா என்று அதிர்ந்து விடாதீர்கள்". இது மிக முக்கியமான இரகசிய சங்கதி. கவனமாய் வாசியுங்கள்.

அந்திகிறிஸ்து உலகை ஆளும் போது அந்திகிறிஸ்துவின் உதவியாளனாய் வரப்போகிற கள்ளத்தீர்க்கதரிசி ஒரு கட்டளை கொடுப்பானாம். அதாவது எல்லா மக்களும் (வீட்டிலுள்ள கடைக்குட்டி உட்பட இல்லையென்றால் அதன் பெயருக்கு அழல்டின் கிடைக்காது) தங்கள் வலது கைகளிலாவது நெற்றியிலாவது ஒரு முத்திரையைப் பொறித்துக் கொள்ளும்படி அவன் கட்டளையிடுவானாம். இதைக் குறித்து முன்னாலேயே நீங்கள் வாசித்திருப்பீர்கள்.

இந்த இதழில் அந்த முத்திரையைக் குறித்து கொஞ்சம் பார்ப்போம். அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் கொடுக்கப்படப் போகிற முத்திரை மூன்று விதத்தில் இருக்குமென்று வேதத்தில் வாசிக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் பதிமூன்றாம் அதிகாரத்தின் 17-ம் வசனத்தைப் பாருங்கள். அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதன் நாமத்தையாவது அதன் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறு ஒருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாது என்று வேதத்தில் வாசிக்கிறோம். இங்கே மிருகம் என்பது அந்திகிறிஸ்துவைக் குறிக்கிறது. இந்த வசனத்திலிருந்து பொறிக்கப்பட வேண்டிய வடிவம் மூன்று விதங்களில் இருக்குமென நிதானிக்கலாம்.

1. எல்லோரும் அந்திகிறிஸ்துவின் முத்திரையை பொறித்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கும். இங்கு முத்திரை என்பது ஒரு சின்னமாக இருக்கும். ஹிட்லரின் 'சுவஸ்திகா' சின்னத்தைப் போன்றோ அல்லது போன இதழில் ஆறு இலக்கங்களின் சின்னத்தை பார்த்து இருப்பீர்களே அது போன்றோ இந்த முத்திரை இருக்கலாம்.

2. அல்லது அந்திகிறிஸ்துவின் பெயரை பொறித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கும். அந்திகிறிஸ்துவின் பெயர் என்னவாயிருக்கும் என்பது இப்போதைக்கு நமக்கு தெரியாது. இந்த 20-ம்

நூற்றாண்டில் யாரையா ஒரு தலைவனின் பெயரை தங்கள் கைகளில் பொறித்துக் கொள்வார்கள் என்று சில புத்திசாலிகள் கேட்கலாம். தமிழகத்தின் மக்களில் பலரது கைகளில் அவர்களது அபிமான சினிமா நட்சத்திரங்களின் உருவமும் அவர்களது கட்சியின் சின்னங்களும் கொடிகளும், பச்சைக் குத்தி இருப்பதை நீங்களே பார்த்திருப்பீர்கள். (அப்படி பொறித்திருப்பவர்கள் அந்திகிறிஸ்துவின் முத்திரையைப் பொறித்துக் கொள்ள கையில் இப்போதே கொஞ்சம் இடம் விட்டு வைத்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இரட்சிக்கவாவது படுங்கள்)

3. அல்லது அந்திகிறிஸ்துவின் பெயரின் இலக்கத்தை பொறித்துக்கொள்ள வேண்டியதாய் இருக்கும்.

அந்திகிறிஸ்துவின் முத்திரை, அல்லது அவனது பெயர், அல்லது அவனது இலக்கம் இந்த மூன்றில் ஏதாவது ஒன்றை பொறித்துக்கொள்ள கட்டளை கொடுக்கப்படும். அந்திகிறிஸ்துவின் பெயரின் இலக்கம் 666 என்று 18-ம் வசனத்தில் வாசிக்கிறோம். அது மனிதனுடைய இலக்கமாயிருக்கிறதென்றும் வேதம் கூறுகிறது. 6-வது நாளில்தான் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது உங்களுக்கு தெரிந்ததே. சரி இந்த 666-ன் இரகசியம் என்ன? அந்திகிறிஸ்துவின் பெயரை எழுதி கூட்டினால் 666 என்ற இலக்கம் வரும் என்பதே அநேக தீர்க்க தரிசன ஆராய்ச்சியாளர்களின் கணக்கு. எபிரேய, கிரேக்க மொழிகளில் உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு இலக்கம் உண்டு? உதாரணமாய் கிரேக்க மொழியில் ஆல்பா (Alpha) என்ற ஒரு எழுத்து உண்டு. இதனுடைய இலக்கம் 1. Beta என்ற ஒரு எழுத்து உண்டு. இதனுடைய இலக்கம் 2. Gamma என்ற எழுத்தின் இலக்கம் 3 ஆகும். இவ்வாறு அந்திகிறிஸ்துவின் பெயரை கிரேக்க மொழியில் எழுதி அதிலுள்ள எழுத்துக்களுடைய" இலக்கங்களைக் கூட்டினால் 666 வரும் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்தது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டதால் கிரேக்க மொழியில்தான் அந்திகிறிஸ்துவின் பெயரை "எழுதிக்" கூட்ட வேண்டுமென்று தீர்க்க தரிசன ஆராய்ச்சியாளர்கள் நம்பி வந்தனர். இதை எல்லாம் நாம் ஏன் தெரிந்து கொண்டு மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டுமென்று நினைக்காதீர்கள். அந்திகிறிஸ்துவின் இலக்கத்தை புத்தியுடையவன் கணக்குப் பார்க்க கடவன் என்று வேதம் கூறுகிறது. நீங்கள் புத்திசாலியானால் தொடர்ந்து வாசியுங்கள்.

இவ்வாறு அந்திகிறிஸ்துவின் பெயர் ஒரு இலக்கமாக கணிக்கப்பட வேண்டும் என்றால் முதலில் அவ்வாறு பெயர்களை இலக்கமாக மாற்றக்கூடிய முறை உலகம் எங்கும் பழக்கத்தில் வரவேண்டும். இவ்வாறு ஒருவரின் பெயரின் இலக்கத்தைக் கண்டுபிடித்து அவர்களை அந்த இலக்கத்தின்படி சங்கேத மொழியில் அழைப்பது பழைய காலத்து கிரேக்க முறையாகும். இந்த முறை கெமாட்ரியா (Gematria) என்று அழைக்கப்படும். இது பல ஆண்டுகளுக்கு முன்னதாய் பின்பற்றப்பட்டு வந்த கிரேக்க முறையாகும். இப்போது நவீன காலத்தில் இவ்வாறு பெயர்களை இலக்கங்களாக மாற்றியமைக்கிற முறை நடைமுறையில் இல்லை. ஆனால் சமீபத்தில் கெமாட்ரியா என்ற இந்த முறை வருமென்று எதிர்பார்க்ககூடிய செய்திகள் வர ஆரம்பித்துள்ளன. இவ்வாறு அந்திகிறிஸ்து என்ற அக்கிரமக்காரன் கையில் உலகை ஒப்படைக்க எல்லா ஆயத்தங்களும் ஆங்காங்கே நடந்து கொண்டு இருக்கின்றன என்பதை இச்செய்திகள் தெரிவிக்கின்றன. அந்திகிறிஸ்துவின் பெயர் இலக்கமாக மாற்றப்படுமென்று வேதத்தில் வாசிக்கிறோம். இலக்கத்தின் மூலம் தொடர்பு கொள்கிற ஒரு முறை, உலகில் அந்திகிறிஸ்து வருவதற்கு முன்னதாக உருவாக வேண்டும். மேலும் அந்திகிறிஸ்து உலகம் முழுவதிலும் தனது திட்டங்களைச் செயல்படுத்தக் கூடியவனாய் இருப்பான் என்று வேதத்தில் இருந்து தானிக்கலாம். இதற்கு உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளையும் இணைக்கக்கூடிய தகவல் தொடர்பு இருக்க வேண்டும். மேலும் அந்திகிறிஸ்துவின் முத்திரையை பொறித்துக்கொள்ளாதவர்கள் விற்கவோ வாங்கவோ முடியாதபடி அவர்களை control பண்ண உலகத்தின் எல்லா பாகங்களோடும் நல்ல தகவல் தொடர்பு இருக்க வேண்டும்.

இன்று செய்திகள் வேகமாக ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல தடையாய் இருப்பதற்கு பல்வேறு மொழிகள் உலகம் எங்கும் பேசப்படுவதே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Language Barrier என்பர். ஆங்கிலம் தான் உலகத்தின் பொது மொழி என்றாலும் எல்லா நாடுகளிலும் எல்லா மக்களுமே ஆங்கிலம் பேசுவதில்லை. இந்தியாவில்தான் ரிக்ஷா ஓட்டுபவர் கூட ஆங்கிலம் பேசுவதைக் காணமுடியும். இத்தாலியில் இத்தாலிய மொழிதான். பிரான்சில் பிரெஞ்சு மொழிதான். ஆனால் உலகமெங்கும் பல மொழிகள் பேசப்பட்டாலும் உலகம் அனைத்

திற்கும் பின்பற்றப்படுகிற எண்கள் முறை ஒன்றுதான். எல்லா தேசங்களிலும் ஒரே மாதிரியான எண்கள்தான் பின்பற்றப்படு கின்றன. அதனால்தான் எண்களை Universal Language என்றழைக்கின்றனர். எனவே, இந்த இலக்க முறை வந்தால்தான் தகவல்கள் உலகமெங்கிற்கும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத் திற்கு அனுப்பப்பட முடியும். இந்த இலக்கமுறை வந்தால்தான் அந்திகிறிஸ்துவின் பெயரும் இலக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு பொறிக்கப்பட முடியும்.

மேற்கண்ட முறையை Digital Communication System என்று அழைப்பர். இந்த நவீன முறைக்கு உலகம் ஆயத்தமாய் இருக் கிறது என்பதற்கு ஆதாரமான ஹிந்து பத்திரிகையில் 9/10/83-ல் வந்த ஒரு செய்தியைத் தருகிறேன். வாசியுங்கள்.

ALL THE WORDS IN NUMBERS

New Delhi. Oct, 19. A team of linguists and computer experts has developed the first numerical dictionary which can be stored in a computer and help translate Hindi into English and vice versa.

The numerical language based on a set of numbers from zero to nine has been developed by Mr. Abasama, director of the Universal Digital Communication Research Institute here.

Using the multi-lingual computer at the Birla Institute of Technology and Science (BITS), Mr· Abasama and two graduate students have produced a numerical dictionary that converts the numbers into English and Hindi words. The dictionary has 540 words to begin with and work is on to compile numerical dictionaries for other Indian languages.

At a seminar on "Computational linguistics" today Mr. K.K. Sivastava, Secretary in the Department of Official Language said the Abasamma dictionary could play a vital role in translation work.

Maj. Gen. A. Balasubramanian, Chairman of the institute said the abasama approach of using numbers to convey meanings would provide a basis for linking various national languages.

The Abasama dictionary comprises two volumes, number to word and word to number. The numbers can be translated to any language. The numbers are stored in a computer and when an English word or sentences is typed in the computer will print its equivalent in Hindi.

The institute is planning to produce numerical dictionaries, for Tamil and Kannada next.

The dictionaries were compiled using BITS computer under a scheme funded by the Electronics Commission. PTI.

## செய்தியின் தமிழாக்கம்

எல்லா வார்த்தைகளும் இலக்கங்களில் : கம்ப்யூட்டர் துறையிலும், மொழிகளிலும் ஆராய்ச்சி செய்கிற ஒரு குழுவினர் வார்த்தைகளுக்கு எண்கள் கொண்ட ஒரு அகராதியை உருவாக்கி உள்ளனர். இந்த அகராதியின் தகவல்கள் கம்ப்யூட்டரில் சேகரித்து வைக்கப்படும். ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கும் மொழி பெயர்ப்பு செய்ய இது உதவும். பூஜ்யத்திலிருந்து ஒன்பது வரையிலான இலக்கங்களைக் கொண்ட இந்த எண்கள் அகராதியை திரு. அபசம்மா என்ற விஞ்ஞானி உருவாக்கு உள்ளார். பிர்லாஇன்ஸ்டியூட்டில் இருக்கும் கம்ப்யூட்டரைக் கொண்டு அபசம்மாவும் அவரது மாணவர்களும் இலக்கங்களை ஆங்கிலத்திற்கோ ஹிந்திக்கோ மாற்றக்கூடிய அகராதியை தயாரித்து எள்ளனர். தற்போதைக்கு அந்த அகராதியில் 540 வார்த்தைகள் தான் உண்டு. மற்ற இந்திய மொழிகளுக்கும் இந்த ஏற்பாட்டை செய்ய முயற்சிகள் நடக்கின்றன. அதிகராப் பூர்வமான மொழிகளின் நிர்வாகக் காரியதரிசி, கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த முறைக்கு மொழி பெயர்ப்பு பணியில் முக்கிய பங்கு உண்டு என்று தெரிவிக்கிறார். பிர்லா இன்ஸ்டிடியூட்டின் தலைவர் மேஜர் ஜெனரல் கெ. பாலசுப்பிரமணியன் இந்த முறை பல தேசிய மொழிகளை இணைக்க உதவும் என்று தெரிவித்துள்ளார். திரு. அபசம்மாவின் அகராதி இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இலக்கத்திலிருந்து வார்த்தைகளுக்கும் வார்த்தையிலிருந்து இலக்கத்திற்கும் எந்த மொழிக்கு வேண்டுமானாலும் அதைகொண்டு மொழி பெயர்க்கலாம். இந்த இலக்கங்கள் ஒரு கம்ப்யூட்டரில் சேகரித்து வைக்கப்படுகின்றன. ஆங்கில வார்த்தை ஒன்று கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டவுடன் கம்ப்யூட்டர் ஆங்கில

வார்த்தைக்கு இணையான ஹிந்தி வார்த்தையை பிரிண்ட் செய்யும். இதே ஸ்தாபனத்தார் தமிழுக்கும், கன்னடத்திற்கும் இதே போன்று அகராதியை உருவாக்கப் போகிறார்கள்.

மேற்கண்ட செய்தி வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் செய்தி தாள்களில் நிறைவேறிக் கொண்டு இருக்கின்றன, என்பதற்கு ஒரு சான்றாகும். தகவல் தொடர்பு முறையிலுள்ள மொழித் தடை நீக்கப்படுகிறது. எல்லா வார்த்தைகளுக்கும் இலக்கம் வர ஆரம்பிக்கின்றன. ஏன் இந்த முறை இந்தியாவில் ஆரம்பித்து இருக்கின்றது? இங்கிருந்து அந்திகிறிஸ்து எழும்பப் போகிறானா என்று பயந்து விடாதீர்கள். உலகத்திலேயே பல மொழிகள் பேசப்படுகிற ஒரே நாடு இந்தியா மாத்திரமே. எனவே தான் திட்டம் இங்கே உருவாக ஆரம்பித்து இருக்கிறது. அடுத்ததாய் அந்திகிறிஸ்து எழும்பப் போகிற E.E.C.-ன் அமைப்பிலுள்ள நாடுகளில் ஒன்பது மொழிகள் பேசப்படுகின்றன. அங்கேயும் மொழித் தடையை நீக்க 'யூரோடிராட்' என்ற கம்புயூட்டரைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தி விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். இதற்காய் 40 மில்லியன் மார்க்ஸ் பணம் செலவு செய்யப்பட்டு ஆராய்ச்சி வெற்றியடைந்துள்ளதாக ஹிந்து பத்திக்கையின் 7/8/83 செய்தி தெரிவிக்கிறது. இந்தியாவிலும் E.E.C-ன் நாடுகளிலும் தான் மொழித்தடை அதிகம். அங்கேயே மொழித்தடை நீக்கப்படுகிறது என்றால் அப்புறம் என்ன?

உலகம் முழுவதற்கும் தகவல் தொடர்பு முறையில் வேகம் அதிகரிக்கப்படப் போகிறது. மொழித்தடை நீக்கப்படுகிறது. எல்லா வார்த்தைகளுக்கும் இலக்கங்கள் வரப்போகின்றன. பழைய கிரேக்க முறையான கெமாட்ரியா மறுபடியும் வரப் போகிறது Digital Communication System உருவாகி விட்டது. அந்திகிறிஸ்து வர வேண்டியதுதான் பாக்கி. உலகத்தின் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உலகத்தின் முடிவிற்கு நம்மை அழைத்து சென்று கொண்டிருக்கிறது. ஆயத்தப்படுங்கள். ஆண்டவராகிய இயேசுவை சந்திப்போம்.

# புதைப் பொருள் ஆராய்ச்சி

தாவீதின் குமாரனாகிய சாலமோனுக்கு ஊழியக்காரனாயிருந்தவன் யெரொபெயாம் என்பவன். இவன் சாலமோனுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தான் என்று 1 ராஜாக்கள் புத்தகம் 11ம் அதிகாரம் 26ம் வசனத்தில் வாசிக்கிறோம். இந்த யெரொபெயாம் ஒருநாள் எருசலேமிலிருந்து வெளியே போகையில் அகியா என்னும் தீர்க்கதரிசி தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைப் பிடித்து அதை 12 துண்டாகக் கிழித்து ராஜ்யபாரம் சாலமோனுடைய கையிலிருந்து பிடுங்கப்பட்டு 12 கோத்திரங்களில் 10 கோத்திரங்கள் யெரொபெயாமுக்கு கொடுக்கப்படும் என்று தீர்க்க தரிசனம் உரைக்கிறார். அத்தீர்க்க தரிசனத்தின்படியே 10 கோத்திரங்கள் ஒரு ராஜாவின் கீழும் 2 கோத்திரங்கள் இன்னொரு ராஜாவின் கீழும் ஆளப்பட இஸ்ரவேல் வம்சம் இரண்டாகப் பிரிகிறது. யூதாவின் கோத்திரமும் பென்யமின் கோத்திரமும் ஒரு ராஜாவின் கீழும், மீதி 10 கோத்திரங்கள் இன்னொரு ராஜாவின் கீழுமாக ஆளப்பட ஆரம்பிக்கின்றன. அதுவரை ஒன்றாய் இருந்த 12 கோத்திரங்கள் இவ்வாறு 2 அரசுகளாகப் பிரிந்து விடுகின்றன.

இவ்வாறு யெரொபெயாமுக்கு ராஜ்யபாரம் தன்னிடமிருந்து பிடுங்கப்பட்டு அளிக்கப்படும் என்று தீர்க்கதரிசி உரைத்ததை, சாலமோன் கேள்விப்படுகிறான். எனவே சாலமோன் யெரொபெயாமை கொல்ல வகை தேடுகிறான். அப்போது யெரொபெயாம் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் என்பவனிடத்தில் ஓடிப் போகிறான். சாலமோன் மரிக்குமட்டும் யெரொபெயாம் எகிப்திலேயே தங்கியிருக்கிறான். இதை 1 ராஜாக்கள் 11ம் அதிகாரம் 40ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

இவ்வாறு பரிசுத்த வேதாகமம் குறிப்பிட்டுள்ள சீஷாக் என்பவன் எகிப்தை ஆண்டது உண்மைதான் என்பதை எகிப்திலே நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றது. வேதத்திலே கூறப்பட்டுள்ள சீஷாக் கி.மு. 945 முதல் 924 வரை ஆண்டதாக எகிப்திய

கல்வெட்டுகளில் இருந்து தெரிய வருகிறது. இந்த ஷீஷாக் எகிப்திய கல்வெட்டுகளிலே சீஷாங்க் என்று குறிப்பிடப்படுகிறான். சாலமோன் கி.மு. 970ல் பட்டத்திற்கு வந்தவன். ஷீஷாக்கின் ஆட்சிக் காலம் சாலமோனின் ஆட்சிக் காலத்திற்கு ஒத்து வருகிறதை கவனியுங்கள். வேதாகமத்தின் சரித்திரக் குறிப்பு உலக சரித்திர குறிப்போடு இணைந்து இருப்பதையும் கவனியுங்கள். இந்த ஷீஷாக் தான் சாலமோனால் விரட்டப்பட்ட யெரொபெயாமிற்கு தஞ்சம் கொடுத்தவன்.

சாலமோன் இறந்த பிறகு அவனது மகன் ரெகொபெய்ாம் பட்டத்திற்கு வருகிறான். எகிப்துக்கு தப்பி ஓடி மறைந்திருந்த யெரொபெயாம் சாலமோன் இறந்து விட்டதனால் தைரியமாய் இஸ்ரேலுக்கு வருகிறான். இது என்ன யெரொபெயாம், ரெகொபெயாம் என்று குழம்புகிறீர்களா? யெரோபெயாம் சாலமோனின் ஊழியக்காரன். ரெகொபெயாம் சாலமோனின் மகன். சாலமோனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அவனது மகனான ரெகொபெயாம் மக்களைக் கொடுமைப்படுத்தி ஆட்சி நடத்தத் தீர்மானித்ததால் மக்கள் எகிப்திலிருந்து வந்த யெரொபெயாமை தங்கள் ராஜா வாக்கினார்கள். இஸ்ரவேலின் 10 கோத்திரங்கள் யெரொபெயாமை பின்பற்றுகின்றன. இஸ்ரவேலின் மீதி 2 கோத்திரங்கள் ரெகொபெயாமை பின்பற்றுகின்றன. 10 கோத்திரங்களுக்கு ராஜாவான யெரொபெபாம் சீகேமை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிய ஆரம்பிக்கிறான். அவன் இஸ்ரவேலின் ராஜா என்றழைக்கப் படுகிறான். இரண்டு கோத்திரங்களுக்கு ராஜாவான ரெகொபெயாம் எருசலேமைத் தலைநகராக கொண்டு ஆள ஆரம்பிக்கிறான். அவன் யூதாவின் ராஜா என்றழைக்கப்படுகிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமுக்கும் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமுக்கும் பகைமை முற்றுகிறது. இது என்ன வெறும் சரித்திரமாய் இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? புதை பொருள் ஆராய்ச்சிக்கே புதைக்கப்பட்ட சரித்திரம் என்றுதான் பெயர் என்று முன்னாலேயே தெரிவித்திருக்கிறேன். முதலில் சரித்திரத்தை பார்ப்போம். பிறகு புதை பொருள் ஆராய்ச்சிக் குறிப்பையும் பார்ப்போம். இஸ்ரவேலின் ராஜாவுக்கும் யூதாவின் ராஜாவுக்கும் உறவு சரியில்லையென்பதை அறிந்து எகிப்தின் ராஜாவாகிய ஷீஷாக் ரெகொபெயாமின் தலைநகரான எருசலேமைத் தாக்குகிறான். கடுமையான யுத்தம் நடக்கிறது. எகிப்தின் ராஜாவாகிய ஷீஷாக் கர்த்தருடைய ஆலயத்தில் உள்ள பொக்கிஷங்களையும், சாலமோன்

செய்து வைத்த பொன் பரிசைகளையும் திருடிக்கொண்டு போய் விடுகிறான். I ராஜாக்கள் 14ம் அதிகாரம் 25ம் வசனத்தில் இதைப் பார்க்கலாம்.

எருசலேம் தேவாலயமே கொள்ளையடிக்கப்பட்டதென்றால் பெரிய தோல்வி ரெகொபெயாமிற்கு இந்த யுத்தத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த யுத்தம் நடந்ததா என்பதற்கு புதை பொருள் ஆராய்ச்சி குறிப்பு உண்டா? எகிப்தில் நடந்த புதை பொருள் ஆராய்ச்சி குறிப்புகள் இந்த யுத்தம் நடந்தது என்பதை தெரிவிக்கின்றன. எகிப்தில் ''கார்நாக்'' என்ற இடத்தில் புதை பொருள் ஆராய்ச்சி நடந்தபோது எகிப்திய கோவில் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்தக் கோவிலின் சுவரிலே சிஷாக் எருசலேமின் மேல் நடத்திய யுத்தம் விவரிக்கப்பட்டுள்ளது. 156 யுத்தக் கைதிகள் கயிறுகளால் கட்டப்பட்டு அந்த கயிறுகள் எல்லாவற்றையும் எகிப்தின் தெய்வமான 'ஆமுன்' தனது கையிலே பிடித்திருப்பதாக கோவிலின் சுவரிலே சித்திரம் ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. இந்த 156 யுத்த கைதிகளின் உருவங்களும் யுத்த கைதிகளை குறிப்பதாக இல்லை. இந்த 156 யுத்த கைதிகளின் ஒவ்வொரு உருவத்தின் மேலும் பாலஸ்தீன தேசத்தின் நகரங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதாவது 'பாலஸ்தீனத்தில் 156 நகரங்களைக் கைப்பற்றி நான் அவற்றை அழித்தேன்' என்பதை சிஷாக் இவ்வாறு சித்திரத்தின் மூலமாய் விவரித்திருக்கிறான். இந்த 156 இடங்களின் பெயர்களில் இதுவரை 120 இடங்களின் பெயர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. எல்லா ஊர்களின் பெயர்களையுமே கண்டு பிடித்துவிட முடியுமென்று நம்பப்படுகிறது. சாலமோன் தனது ராணுவத்தை வைத்திருந்த மெகிதோ, கிபியோன், யோசுவா சந்திரனை நிற்க கட்டளை கொடுத்த ஆயலோன் போன்ற இடங்களின் பெயர்கள் இந்த உருவங்களின் மேல் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் பாலஸ்தீனத்தில் 156 நகரங்களை சிஷாக் அழித்திருக்கிறானென்று தெரிய வருகிறது.

மேலும் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த 'சிஷாக்கின்' பாதுகாக்கப்பட்ட சரீரம் 1939ல் 'டானிஸ்' (Tanis) என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட எகிப்திய அரசர்களின் சரீரங்கள் Egyptian Mummies என்று அழைக்கப்படுகின்றன. மேலும் கண்டுபிடிக்கப்பட்ட சிஷாக் அரசனின் சவப்பெட்டியில் சிஷாக்கின் வெற்றியின் சின்னமாக அவனது உடலோடு

சாலமோன் தேவாலயத்திலிருந்து அவன் கொண்டு வந்ததாக கருதப்படும் தங்கமும் வைக்கப்பட்டிருந்ததாம்.

எகிப்திலுள்ள கார்நாக் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கோவிலும், கண்டுபிடிக்கப்பட்டுள்ள சீஷாக்கின் உடலும் சீஷாக் என்ற அரசன் எகிப்தை ஆண்டான், அவன் சாலமோன், யெரொபெயாம் என்பவர்கள் காலத்தில் வாழ்ந்தான், யெரொபெயாம் அவனிடத்தில் போய் அடைக்கலம் புகுந்தான் என்ற வேதத்தின் குறிப்பையும் இந்த சீஷாக் எருசலேமை தாக்கி ஒரு பெரிய யுத்தத்தை செய்தான் எருசலேம் தேவாலயத்தைக் கொள்ளையடித்தான் என்ற வேத குறிப்பையும் நிரூபித்துள்ளன.

கடைசியாக வழக்கம்போல் ஒன்று! இந்த சீஷாக்கை பற்றி வேதத்தில் இரண்டே இரண்டு வசனங்கள்தான் உள்ளன. வேதத்தில் இரண்டே இரண்டு வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சம்பவம் கூட சரித்திர ரீதியாக புதை பொருள் ஆராய்ச்சி குறிப்புகளோடு நிரூபிக்கப்பட முடிகிறது என்பதை கவனியுங்கள். ஆதாரப் பூர்வமான வேதத்திற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்.



# தெய்விக சுகம்

இத்தனை நாட்களாய் நீங்கள் வாசித்த வேதப் போதனைகளி ஞல் தெய்விக சுகத்தைக் குறித்து உங்களுடைய விசுவாசம் வளர்ந்து இருக்குமென்று நிச்சயம் நம்புகிறேன். ஏனென்ருல் விசு வாசம் கேள்வியினுல் வரும். எனவே, உங்கள் விசுவாசத்தினுலேயே தெய்விக சுகத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம் என்பதை வாசகர்கள் உணர்ந்து இருப்பீர்கள். அப்படியென்ருல் மருந்து சாப்பிடுவது தவரு என்ற கேள்வி அநேகருக்கு எழ வாய்ப்பு உண்டு. அதற்கான பதிலையும் தெய்விக சுகத்தைப் பெற்றுக் கொள்வதற் கான பல வழிகளையும் பற்றித் தொடர்ந்து பார்ப்போம்.

மருந்து இல்லாமலேயே தெய்விக சுகத்தை நீங்கள் நிச்சயம் பெற்றுக் கொள்ளலாம். அது சிறிய வியாதியாக இருந்தாலும் சரி. பெரிய வியாதியாக இருந்தாலும் சரி, சிலர் சாதாரண வியா திக்கு எல்லாம் ஆண்டவரிடத்தில் ஜெபித்து அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்கின்றனர், உங்கள் தலையிலுள்ள மயிரை எல்லாம் எண்ணி, வைத்திருக்கிற ஆண்டவர் உங்கள் சாதாரண தலைவலியையும் கூட சுகப்படுத்த காத்திருக்கிருர். இன்னும் சிலர் சிறிய வியாதிகள் தான் விசுவாசத்தினுல் சுகமாகும். பெரிய வியாதி களுக்கு எல்லாம் அறுவை சிகிச்சைதான் செய்யவேண்டும். பெரிய வியாதிகளுக்கு எல்லாம் மருத்துவரிடம் தான் போகவேண்டு மென்று நினைக்கின்றனர். அக்கருத்தும் தவறு. உலகில் இருக்கக் கூடிய எல்லா கொடிய நோய்களையும்விட நம் ஆண்டவர் பெரிய வர். எனவே, சாதாரண தலைவலியிலிருந்து கான்சர் வரை நீங்கள் உங்கள் சுகத்தை உங்கள் விசுவாசத்தினுல் மருந்துகள் இல்லாமலேயே பெற்றுக் கொள்ளலாம்.

அபபடியென்ருல் மருந்து சாப்பிடுவது தவறென்ற அர்த்தமும் இல்லை. அது உங்கள் விசுவாசத்தைப் பொறுத்தது. மருந்துகளும், டாக்டர்களும் தேவனுல் நமக்கு கிடைக்கப்பட்ட ஈவுகள். யாக் கோபு முதலாம் அதிகாரம் 17-ம் வசனத்தில் நன்மையான எந்த

ஈவும், பூரணமான எந்த வரமும், பரத்தில் இருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்று வாசிப்பதினால் மருத்துவர்களும் மருந்துகளும் நமக்கு தேவனால் அளிக்கப்பட்ட ஈவுகளே என உணரலாம். மருத்துவர்களும் சுகம் அளிக்கிற ஊழியத்தை செய்கிற தேவனுடைய ஊழியரும் ஒரே பொதுவான எதிரியோடு வெவ்வேறு கோணங்களில் இருந்து போரிடுகின்றனர். அவ்வளவு தான். Doctors and healing evangelists are fighting a common enemy.

மருந்து சாப்பிடாமல் இருக்கவேண்டுமென்பது சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உபதேசங்களில் ஒன்று அல்ல. மருந்து சாப்பிடாமல் இருப்பது அவரவருடைய விசுவாசத்தைப் பொறுத்தது. இதனால் மருந்து சாப்பிடாமல் இருக்கிறவர்கள் மருந்து சாப்பிடுகிறவர்களைத் தாழ்வாக நினைப்பதும் தவறு. விசுவாசத்தில் பலவீனம் உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று வேதம் சொல்லுகிறதே தவிர அடித்து விரட்டச் சொல்லவில்லை. மருந்துகள் இல்லாமல் சுகத்தை உங்கள் விசுவாசத்தின் மூலமாக பெற்றுக்கொள்வது சிறந்தது. மருந்துகள் மூலமாக சுகத்தைப் பெற்றுக் கொள்வதும் நல்லது. மருந்துகள் இல்லாமல் உங்கள் விசுவாசத்தின் மூலமாக சுகத்தை பெற்றுக்கொள்வது, உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கும் உதவும். மருந்துகள் இல்லாமல் சுகத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விசுவாசம் உங்களுக்கு உருவாகியிருக்குமென்றால் மருந்துகள் இல்லாமல் சுகத்தை பெற்றுக் கொள்ளுங்கள். அல்லது, மருந்துகளோடேயே ஆண்டவரிடத்தில் ஜெபித்து சுகத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் வெறும் வைராக்கியத்தில் நிற்காதிர்கள். நீங்கள் சுகத்தோடு இருக்கவேண்டும். அதுதான் தேவனுடைய பரிபூரணமான சித்தம்.

தெய்வீக சுகம் பல விதங்களில் பல முறைகளில் உங்களுக்குக் கிடைக்கலாம். 7 முறைகளில் தெய்வீக சுகத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம், என்று வேதத்திலிருந்து அறிகிறோம். ஒவ்வொரு முறையையும் தனித்தனியாக பார்க்குமுன் முதலில் அந்த 7 முறைகளைப் பார்ப்போம்.

1. இயேசுவின் நாமத்தினாலே வியாதியை நீங்கச் சொல்லி கட்டளை கொடுத்து சுகத்தை பெற்றுக் கொள்ளலாம். இயேசுவின் நாமத்தினாலே பிசாசின் பிடியிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ள

இந்த முறையை செயல்படுத்தலாம். இதற்கு நமக்கு ஆதாரமாய் இருக்கிற வசனம் யோவான் 14-ம் அதிகாரத்தின் 13-ம் 14-ம் வசனங்கள்.

2. இயேசுவின் நாமத்தினாலே பிதாவினிடத்தில் வேண்டிக் கொண்டு நீங்கள் சுகத்தை பெற்றுக் கொள்ளலாம். இதற்கு ஆதாரமாய் உள்ள வசனம் யோவான் 16-ம் அதிகாரத்தின் 23-ம் 24-ம் வசனங்கள்,

3. இரண்டு பேர் ஒருமனப்பட்டு இயேசுவின் நாமத்தினால் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளவும் சுகம் உங்களுக்குக் கிடைக்கும். மத்தேயு 18.ம் அதிகாரத்தின் 19-ம் 20-ம் வசனங்கள் இதற்கு ஆதாரமாய் உள்ளன.

4. எண்ணெய் பூசி ஜெபிக்க நீங்கள் சுகத்தை பெற்றுக் கொள்ளலாம். யாக்கோபு 5-ம் அதிகாரத்தின் 14-ம் 15-ம் வசனங்கள் இதற்கு ஆதாரமானவை.

5. கரங்களை வைத்தலின் மூலமாக நீங்கள் தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மார்க்கு 16-ம் அதிகாரத்தின் 15 முதல் 18 வரையிலான வசனங்கள் இதற்கு ஆதாரமானவை.

6, ஊழியக்காரருக்கு இருக்கும் சுகமளிக்கிற வரத்தின் மூலமாக நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ளலாம், 1 கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தின் 9-ம் வசனம் இதற்கு ஆதாரமானது.

7. உங்கள் விசுவாசத்தின்படி வேத வசனத்தில் தெய்வீக சுகம் உங்களுக்கு வாக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்ற உணர்வின் படி நீங்களாகவே உங்கள் சுகத்தை உங்கள் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். வியாதியே வராமலும் காத்துக் கொள்ளலாம். ஏசாயா 53-ம் அதிகாரத்தின் 4-ம், 5-ம் வசனங்கள். மத்தேயு 8-ம் அதிகாரத்தின் 17-ம் வசனம். 1 பேதுரு 2-ம் அதிகாரத்தின் 24-ம் வசனம் போன்ற தெய்வீக சுகத்தை வாக்களிக்கும் வசனங்களை இருதயத்திலே ஏற்றுக்கொண்டு தெய்வீக சுகம் உங்களுக்கு சொந்தமானது என்ற உணர்வோடு எப்போதும் நீங்கள் சுகத்தோடு இருக்கலாம். இது தான் 7 முறைகளிலும் மிகவும் சிறந்த முறையுங்கூட,

இந்த 7 முறைகளையும் ஒவ்வொன்ருய் தெளிவாக பார்க்கப் போகிறேம், ஒரு சில காரியங்களை முன்னுலேயே நாம் பார்த்திருக்கிறேம். ஆனால் இந்த 7 தலைப்புகளில் ஒவ்வொன்றையும் குறித்தும் நாம் தொடர்ந்து பார்க்கப் போகிறேம். முதலாவது முறையாகிய இயேசுவின் நாமத்தினுல் வியாதிக்கு கட்டளை கொடுத்து அல்லது பிசாசுக்கு கட்டளை கொடுத்து சுகத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய முறையைப் பார்ப்போம்.

மேற்கண்ட முதல் முறைக்கு ஆதாரமாயுள்ள வசனங்கள் யோவான் 14-ம் அதிகாரத்தின் 13-ம், 14-ம் வசனங்களாகும். வசனத்தை கவனியுங்கள்.

''நீங்கள் என் நாமத்தினுலே எதைக் கேட்பீர்களோ குமாரனிலே பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினுலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்''. இந்த வார்த்தைகளைச் சொன்னவர் இயேசு கிறிஸ்து.

மேற்கண்ட வசனத்தில் இயேசுவின் நாமத்தினுல் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ள இயேசு கிறிஸ்து இங்கே சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். இந்த வசனத்தில் ''என் நாமத்தினுலே பிதாவைக் கேட்டால்'' என்று சொல்லப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த வசனம் இயேசுவின் நாமத்தினுல் பிதாவினிடத்தில் ஏறெடுக்கக்கூடிய ஜெபத்தைக் குறித்து சொல்லவில்லையென்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் கேட்கக்கூடிய ஜெபத்தைக் குறித்து யோவான் 16-ம் அதிகாரத்தின் 23-ம் வசனத்தில் இயேசு கிறிஸ்து கூறுகிறுர். நீங்கள் என் நாமத்தினுலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு தருவார் என்று அங்கே வாசிக்கிறேம். யோவான் 16-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள வசனம் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்கிற ஜெபத்தைக் குறிக்கிறது. ஆனால் யோவான் 14-ம் அதிகாரத்தில் ஜெபத்தை குறித்து இயேசு கிறிஸ்து கூறவில்லை. இந்த 2 அதிகாரங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிற வசனங்கள் வெவ்வேறு கருத்தை தெரிவிக்கின்றன. 16-ம் அதிகாரத்தில் என் நாமத்தினுலே பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்வது எதுவோ என்று இயேசு சொல்லி இருப்பது ஜெபத்தைக் குறிக்கிறது. 14-ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பது என்ன?

14-ம் அதிகாரத்தில் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளில் எதைக் கேட்டாலும் என்ற பதத்திற்கு மூல பாஷையில் demand என்று அர்த்தம் கொள்ளும் வார்த்தை தான் பயன்படுத்தப்படுகின்றது. நாம் ஜெபத்தில் நம்முடைய விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது demand பண்ணத் தேவையில்லை. பிதாதான் நாம் எதைக் கேட்டாலும் தர ஆயத்தமாயிருக்கிறாரே. ஆனால் demand என்பது ஒரு அதிகாரப் பூர்வமான கோரிக்கையை குறிக்கிறது. பிதாவினிடத்தில் அதிகார பூர்வமான கோரிக்கையை நாம் சமர்ப்பிக்கத் தேவையில்லை. அவர் உங்களை நேசிக்கிறார். நீங்களும் அவரை நேசிக்கிறீர்கள். எனவே, நீங்கள் வேண்டிக் கொள்ள உங்களுடைய விண்ணப்பங்களுக்கு பதில் எளிதில் கிடைத்து விடும். பதில் எளிதில் கொடுக்காத ஒருவரிடம் தான் நீங்கள் demand செய்யவேண்டியிருக்கும். இந்த வசனத்தில் எதைக் கேட்டாலும் என்ற பதத்திற்கு demand என்று அர்த்தம் கொள்ளும் வார்த்தை மூல பாஷையில் பயன்படுத்தப்பட்டிருப்பதால் பிதாவிடம் வேண்டிக்கொள்ளச் சொல்லி இந்த வசனத்தில் இயேசு சொல்லவில்லை என்பதை உணரலாம். அப்படியென்றால் இந்த வசனம் என்ன கருத்தை தெரிவிக்கிறது.

என் நாமத்தினால் நீங்கள் கட்டளை கொடுக்க அது நடக்குமென்று இயேசு தெரிவிக்கிறார். அதாவது இயேசுவின் நாமத்தினால் கட்டளை கொடுக்க பிசாசின் கட்டுகளில் இருந்து விடுதலை கிடைக்கும். பிசாசுக்கு இயேசுவின் நாமத்தினால் கட்டளை கொடுக்க தெய்வீக சுகம் உங்களுக்கு கிடைக்கும். இதற்காய் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ள தேவையில்லை. வேதத்தின் சம்பவம் ஒன்றை உங்களுக்கு ஆதாரமாய் தெரிவிக்கிறேன். அப்போது உங்களுக்கு நன்றாய் புரியும்.

பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்கு போகும்போது சப்பாணியானவன் ஒருவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறான். அப்போது பேதுரு சப்பாணியைப் பார்த்து வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். இயேசுவின் நாமத்தினால் எழுந்து நட என்று சொல்லுகிறார். உடனே சப்பாணி சுகமாகி நடந்து குதித்து செல்கிறான். இங்கே “இயேசுவின் நாமத்தினால் பிதாவே இவனை சுகப்படுத்தும்” என்று பேதுரு ஜெபிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள்.

பேதுரு இயேசுவின் நாமத்தினால் எழுந்துநட என்று கட்டளை தான் கொடுக்கிறார். யோவான் 14-ம் அதிகாரத்தின் 14-ம் வசனத்தில் இயேசு சொன்ன வார்த்தைகளை பேதுரு இங்கே செயல் படுத்திக் காட்டுகிறார்.

எனவே இயேசுவின் நாமத்தினால் கட்டளை கொடுக்க வியாதிகள் நீங்கும். பிசாசுகளின் கட்டுகளிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று உணரலாம். இயேசு என்று நாமத்தை உபயோகப்படுத்தும் அதிகாரம் எல்லா இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கும் உண்டு. எனவே, தெய்வீக சுகத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள இயேசுவின் நாமத்தினால் நீங்கள் கட்டளை கொடுக்க தெய்வீக சுகம் கிடைக்கலாமென்று தெரிந்து கொள்ளுங்கள். இந்த முறையில் இயேசுவின் நாமத்தினால் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளாமல், ஜெபிக்காமல் நாமே இயேசுவின் நாமத்தினால் கட்டளை கொடுக்கிறோம்.

யோவான் 14-ம் அதிகாரத்தின் 14-ம் வசனம் மூலபாஷையில் பின்வருமாறு அர்த்தம் கொள்ளும்படி சொல்லப்பட்டுள்ளது. "If you demand anything in my name I will do it for you. If I dont have it I shall make it for you'!.

மூல பாஷையில் மேற்கண்ட வசனம் ஏந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதை தமிழில் தருகிறேன்:—

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன். இல்லாததை உங்களுக்கு உருவாக்கியும் தருவேன்''.

சப்பாணியானவன் கால்கள் சூம்பிப் போன நிலைமையில் உட்கார்ந்திருக்கும்போது அங்கே நல்ல திடமான பலமான கால்கள் இல்லை. என் நாமத்தினாலே கட்டளை இடுங்கள் என்று சொன்ன இயேசுவின் வார்த்தைகளின்படி பேதுரு கட்டளை கொடுத்தவுடன் அங்கே இல்லாத ஒன்று உருவாக்கப்படுகிறது. அவனுடைய கால்களும் கரடுகளும் பலம் பெறுகின்றன. "If I dont have it I will make it for you" என்ற வார்த்தைகளின்படி அதாவது "அங்கே இல்லாததை நான் உருவாக்கித் தருவேன்'' என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி அங்கு அற்புதம் நடக்கிறது.

எனவே, ''இயேசுவின் நாமத்தினால் சுகம் அடைவீர்களாக'' என்று அதாவது ''Be healed in the name of Jesus'' என்று நீங்கள் சொல்ல வியாதியாய் உள்ள உங்கள் பிள்ளைகள் சுகமாவார்கள்: இயேசு என்ற நாமம் உங்களுடையது. உங்களுக்குரியது. தைரியத்தோடேயே பயன்படுத்துங்கள். எந்த இயேசுவின் நாமத்தினால் பேதுரு சப்பாணியை சுகப்படுத்தினாரோ அதே இயேசுவின் நாமம் உங்கள் கையிலும் உண்டு. ஒரு சிலர் பேதுரு அப்போஸ்தலனாய் இருந்ததனால் தான் சப்பாணியைச் சுகப்படுத்தினார் என்று சொல்லலாம். அக்கருத்து தவறு. அப்போஸ்தலர் 4-ம் அதிகாரத்தின் 7-ம் வசனத்தில் நீங்கள் எந்த வல்லமையினாலே எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று பேதுருவை கேட்டபோது நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இந்த சப்பாணி உங்களுக்கு முன்பாய் சொஸ்தமாய் நிற்கிறான் என்று பேதுரு சொல்லுவதை 10-ம் வசனத்தில் கவனியுங்கள். நான் அப்போஸ்தலன் என்பதினால் அவனை சுகப்படுத்தினேனென்று பேதுரு சொல்லவில்லை, இயேசுவின் நாமத்தினால் சப்பாணி சுகம் ஆக்கப்பட்டான் என்று தான் பேதுரு சொல்லுகிறார். எனவே, அதே இயேசுவின் நாமம் உங்களுக்கும் உண்டு என்பதினால் நீங்களும் சுகத்தைப் பெற இயேசுவின் நாமத்தை உபயோகிக்கலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அடுத்த முறைகளை வரும் நாட்களில் பார்ப்போம்.



# வேதத்தில் சரித்திரம்

## எசேக்கியாவும் சனகரிப்பும்

சென்ற இதழில் அசிரிய வல்லரசின் தலைநகராயிருந்த நினிவே யில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சி குறிப்புகளை குறித்து பார்த் தோம். அந்த அசிரிய வல்லரசின் ராஜாவாய் இருந்த சனகரிப்பைக் குறித்தும் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவைக் குறித்தும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சரித்திர சம்பவத்தை இந்த இதழில் பார்ப்போம்.

நாம் இந்த இதழில் பார்க்கப்போகிற சம்பவம் ஏசாயா தீர்க்க தரிசன புத்தகத்தின் 36ம் 37ம் அதிகாரங்களிலும் 2 ராஜாக்களின் புத்தகத்தில் 18ம் 19ம் அதிகாரங்களிலும் 2 நாளாகமம் புத்தகத் தில் 32ம் அதிகாரத்திலும் சொல்லப்பட்டுள்ளது. வேதத்தை ஆராய வேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்கள் மேற்கண்ட பகுதி களை ஒரு முறை வாசித்து விடுங்கள்.

வேதத்தில் கூறப்பட்டுள்ள மேற்கண்ட சரித்திர சம்பவத்தை யும் அது உண்மையில் நடந்ததா என்பதற்கான ஆதாரங்களையும் இக்கட்டுரையில் பார்ப்போம். எசேக்கியா ராஜாவின் 14ம் வருஷத்திலே அசிரிய ராஜாவாகிய சனகரிப் எசேக்கியாவிற்கு எதி ராக படை எடுத்து வந்தான் என்று வேதம் கூறுகிறது. எசேக்கியா வின் ஆட்சிக்காலம் கி.மு. 715 முதல் 687 வரை நீடித்ததாக வேத சரித்திர ஆராய்ச்சியாளர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. சனகரிப் பின் ஆட்சி காலம் கி.மு. 705 முதல் 681 வரையாகும், என்று அசிரிய கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகிறது. எசேக்கியாவின் ஆட்சி காலத்தின் 14ம் வருடம் என்பது கி.மு. 701 ஆகும் என்று நாமே இப்போது கணக்கிட்டு கொள்ளலாம். கி.மு. 701ல் தான் சனகரிப் எசேக்கியா மீது படை எடுத்து வந்திருக்கிறான். வேதத் தில் கூறப்பட்டுள்ள சனகரிப்பும் எசேக்கியாவும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் படையெடுப்பு நடந்த வருடத்தையும் குறித்து பார்த்து விட்டோம்.

அடுத்ததாய் படையெடுப்பு நடந்ததா அது எவ்வாறு முடிந்தது என்பதற்கான ஆதார குறிப்பை பார்ப்போம். சனகரிப் யூதாவின் பட்டணங்களில் பலவற்றைக் கைப்பற்றி லாகிசில் பாளையம் இறங்குகிறான். அங்கிருந்து எருசலேமை தாக்க திட்டமிடுகிறான். அப்போது எசேக்கியா சனகரிப்பிற்கு கப்பம் செலுத்த ஒத்துக் கொள்கிறான். அப்படியே அசிரிய ராஜா எசேக்கியாவின மேல் 300 தாலந்து வெள்ளியையும் 30 தாலந்து பொன்னையும் சுமத்துகிறான். இது வேதத்தில் கூறப்பட்டுள்ள சரித்திரம்,

நினிவே நகரத்தில் புதைப்பொருள் ஆராய்ச்சி நடந்தபோது களிமண்ணினாலான ஒரு பெட்டகம் கண்டுபிடிக்கப்பட்டது. (Hexagonal clay prism) அதில் சனகரிப் எசேக்கியா ராஜாவினிடத்திலிருந்து 300 தாலந்து வெள்ளியையும் 30 தாலந்து பொன்னையும் பெற்றான் என்று குறிப்பு காணப்படுகிறது. இது வேதத்தின் சரித்திர குறிப்பு உண்மை என்பதற்கு சான்று.

எசேக்கியா அனுப்பின பொன்னினாலும் வெள்ளியினாலும் திருப்தி அடையாத சனகரிப் தனது ராணுவ தலைவர்களை பெரிய சேனையோடு எருசலேமை கைப்பற்ற அனுப்புகிறான். சனகரிப்பின் ராணுவ தளபதியான ரப்சாக்கே எருசலேமின் மக்களை சரண் அடையச் சொல்லி கட்டளை கொடுக்கிறான். "எசேக்கியா ராஜா உங்களை காப்பாற்ற மாட்டான். அசிரிய ராஜாவாகிய சனகரிப்பின் கையிலே இந்த நகரம் ஒப்பு கொடுக்கப்படும்" என்று எருசலேமின் குடிகளை பயமுறுத்துகிறான். அப்போது எசேக்கியா ராஜா தனது வஸ்திரங்களை கிழித்து கொண்டு இரட்டு உடுத்திக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து ஏசாயா தீர்க்கதரிசியினிடத்திற்கு தனது அரண்மனை விசாரிப்புகாரனை அனுப்புகிறான். அப்போது ஏசாயா, "அசிரிய ராஜாவினால் அனுப்பப்பட்ட ரப்சாக்கினுடைய வார்த்தைகளை கேட்டு பயப்பட வேண்டாம். இதோ சனகரிப் ஒரு செய்தியை கேட்டு தன் தேசத்திற்கு திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்புவேன்" என்று கர்த்தர் உரைக்கிறார், என்று சொல்லி அனுப்புகிறார். இது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனம்.

ஏசாயாவின் மூலம் தேவன் உரைத்தபடியே எருசலேமை முற்றுகையிட்ட சனகரிப் எருசலேமை தாக்காமல் திரும்பி நினிவேக்கு சென்றுவிடுகிறான், இது சரித்திரம். இதற்கான ஆதாரம் ஏதாவது

உள்ளதா? நினிவேயில் நடந்த புதைப்பொருள் ஆராய்ச்சியின் போது பல களிமண்ணினாலான பலகைகள் கண்டெடுக்கப்பட்டன. சனகரிப்பின் யுத்தங்களும் அவனது வெற்றிகளும் இந்த கல்வெட்டு களிலே விவரிக்கப்பட்டுள்ளன. எருசலேமின் மேல் அவன் தொடுத்த யுத்தத்தை குறித்து ஒரு பலகையிலே கூறப்பட்டுள்ள வார்த்தை களின் தமிழாக்கத்தை தருகிறேன் வாசியுங்கள்.

"எசேக்கியா என்ற யூதன் என்னுடைய நுகத்திற்கு கீழ்படியாமல் போனதால் நான் அவனது 46 நகரங்களைத் தாக்கினேன். முற்றுகை இயந்திரங்களோடும் காலாட்படைகளோடும் கண்ணிகளோடும் சுரங் கப் பாதைகள் அமைத்துப் பல தடைகளை ஏற்படுத்தியும் பல நகரங்களை நான் கைப்பற்றினேன். 20 ஆயிரத்து 150 பேரை சிறைபிடித்தேன். குதிரைகள் கழுதைகள் ஒட்டகங்கள் ஆடுமாடுகள் இவற்றையும் எண்ணிக்கையில்லாமல் கைப்பற்றினேன். எசேக்கியா ராஜாவையோ அவனது நகரத்திலே எருசலேமிலே சிறைபிடிக்கப்பட்ட பறவை போல காவல் வைத்தேன். அவனது எருசலேம் நகரத்தில் இருந்து வெளியே வந்தவர்களை உபத்திரவப்படுத்தினேன். தனது எருசலேம் நகரை பலப் படுத்த அவன், உதவி பெற்றிருந்த அராபியர்கள் அவனைவிட்டு ஓடி விட்டனர். நான் எசேக்கியாவின் மேல் 30 தாலந்து தங்கத்தையும் 300 தாலந்து வெள்ளியையும் வரியாக நியமித்தேன்".

மேற்கண்ட கல்வெட்டு குறிப்பிலே சனகரிப், தான் எருசலே மைக் கைப்பற்றினதாக சொல்லவில்லை. 46 நகரங்களை கைப்பற்றி னேன் என்று சொல்லுகிற சனகரிப் எருசலேமை முற்றுகையிட்ட தாக மாத்திரம் தெரிவித்துள்ளான். எல்லா யுத்தங்களிலும் தான் பெற்ற வெற்றியை கல்வெட்டுகளிலே பொறித்துள்ள சனகரிப் எருசலேமின் தான் வெற்றி பெற்றதாக குறிப்பிடவில்லையே ஏன்? இதற்கு காரணம் எருசலேமை சனகரிப்பினால் கைப்பற்ற முடிய வில்லை என்பதே. வேதத்தின் சரித்திர குறிப்பின்படியே சனகரிப் எருசலேமை கைப்பற்றாமல் நினிவேக்கு சென்று விடுகிறான். மேற் கண்ட குறிப்புகள் வேதத்தின் சரித்திர சம்பவத்திற்கு ஆதாரங்க ளாகும். வேதத்தின் தீர்க்கதரிசன நிறைவேறுதலுக்கும் ஆதாரமா கும்.

சரி, ஏன் சனகரிப்பினால் எருசலேமைக் கைப்பற்ற முடிய வில்லை? இக்கேள்விக்கு வேதம் தான் பதில்சொல்லுகிறது.

"சனகரிப்பின் சேனை எருசலேமை முற்றுகையிட்டிருந்த ஒரு இரவிலே கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளையத்தில் ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் பேரை சங்கரித்தான். அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய் கிடந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. எனவே தான் சனகரிப் எருசலேமை கைப்பற்றாமல் திரும்பி சென்றுவிடுகிறான்.

ஏசாயா தீர்க்கதரிசி சனகரிப்பை குறித்து இன்னொரு தீர்க்க தரிசனத்தையும் உரைத்தார். அதாவது சனகரிப்பை அவன் தேசத்திலே பட்டயத்தினால் விழப் பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்றும் ஏசாயா கூறி இருந்தார். இது வேதத்தின் தீர்க்கதரிசனம். இது நிறைவேறிற்று? சனகரிப் நினிவேக்கு திரும்பி போய் தனது தெய்வமாகிய 'நிஸ்ரோகின்' கோவிலிலே பணிந்து கொள்ளும்போது அவனுடைய குமாரராகிய அத்ரமலேக்கும், சரேத்சேரும் சனகரிப்பை பட்டயத்தினால் வெட்டி கொன்றார்கள். சனகரிப்பின் குமாரனான எசரத்தோன் பட்டத்திற்கு வந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இது வேதம் குறிப்பிடும் சரித்திரமும், ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறினதற்கான வேதத்தின் ஆதாரமுமாகும்.

சரி. மேற்கண்ட வேத சரித்திர குறிப்பின்படியே சனகரிப் கொலை செய்யப்பட்டானா? எசரத்தோன் தான் பட்டத்திற்கு வந்தான் என்பதற்கு ஆதாரம் உண்டா? வேதத்தின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று? அசீரிய கல்வெட்டுகளிலே எசரத்தோன் எழுதியுள்ள குறிப்பை தருகிறேன் வாசியுங்கள். "எனது சகோதரர்கள் திட்டமிட்டார்கள். தங்கள் தேவனை மறந்தார்கள். பலாத்காரத்தில் இறங்கினார்கள். அபிபாயம் செய்ய திட்டமிட்டார்கள். எனக்கு எதிராகவும் பின்னாலும் இருந்து திட்டமிட்டார்கள். ராஜ்ய பாரத்தைக் கைப்பற்ற தங்கள் தகப்பனாகிய சனகரிப்பையே கொலை செய்தார்கள்" இது நினிவேயில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டின் வார்த்தைகள். ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின்படியே சனகரிப் கொலை செய்யப்பட்டான் என்பதையும் அசீரிய கல்வெட்டு அதை உறுதி செய்கிறதையும் கவனியுங்கள்.

சனகரிப் கொலை செய்யப்பட்ட பிறகு எசரத்தோன் பட்டத்திற்கு வந்தான் என்று வேதம் கூறுகிறது. இதற்கும் ஆதாரம் உண்டா? எசரத்தோனின் கல்வெட்டு குறிப்பை தருகிறேன்.

வாசியுங்கள். எனது தகப்பனுக்கும் எனக்கும் எனது தெய்வமாகிய அசூருக்கும் எதிராய் திட்டம் இட்ட மனிதர்களுடைய நாக்குகளை நான் கிழித்தேன். நான் அவர்கள் கூட்டத்தை தோற்கடித்தேன். எந்த சிலையின் மேல் சனகரிப்பின் உடலை மோதி அடித்தார்களோ அந்த சிலையின் மேல் அவர்களை உயிரோடு அடித்து நான் கொன்றேன். நான் அவர்களுடைய சரீரங்களை நாய்களுக்கும் கழுகுகளுக்கும் ஆகாயத்து பறவைகளுக்கும் கடலின் மச்சங்களுக்கும் ஆகாரமாகப் போட்டேன்". மேற்கண்ட குறிப்பு எசரத்தோன் தன் தகப்பனான சனகரிப்பை கொன்றவர்களை அவன் எப்படி வென்று பட்டத்திற்கு வந்தான் என்பதை தெரிவிக்கிறது. சனகரிப்பிற்கு பின் எசரத்தோன் தான் பட்டத்திற்கு வந்தான் என்ற வேதத்தின் சரித்திர குறிப்பையும் நிரூபிக்கிறது.

வேதத்தின் தீர்க்கதரிசனங்களுக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். வேதத்தின் சரித்திர குறிப்புகளுக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். பரிசுத்த வேதாகமத்திற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்.



# வேதாகமத்தில் முரண்பாடு

தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப் போலவும் என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியை போலவும் கட்டினார். சங். 78: 69.

பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதன் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார். சங்கீதம் 104: 5.

சூரிய சந்திரரே அவரை துதியுங்கள். பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே அவரை துதியுங்கள், வானாதி வானங்களே அவரைத் துதியுங்கள். ஆகாய மண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே அவரைத் துதியுங்கள். அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது. அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் அவைகள் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நிலைக்கும்படி செய்தார். மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார். சங். 148: 3-6.

ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது. பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது. பிரசங்கி 1: 4.

மேற்கண்ட வசனங்கள் பூமியும் வானங்களும் அழியாது. என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்ற கருத்தை தெரிவிக்கின்றன.

வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை. மார்க்கு 13: 31.

அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின. அவைகளுக்கு இடம் காணப்படவில்லை. வெளிபடுத்தின விசேஷம் 20: 11.

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்போது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். பூதங்கள்

வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்; 2 பேதுரு 3: 10.

மேற்கண்ட வசனங்கள் பூமியும் வானங்களும் அழிந்து போகு மென்ற கருத்தை தெரிவிக்கின்றன. இந்த இரண்டு பிரிவான வச னங்களுக்கு இடையே முரண்பாடு இருப்பதுபோலத் தெரிகிறது. இதில் முரண்பாடு இல்லையென்பதை நிரூபிக்க விஞ்ஞான உலகத் திற்குள் வேதத்தில் அடிப்படையில் சென்று வருவோம்.

விஞ்ஞானத்தில் சக்தியைக் குறித்து இரண்டு அடிப்படை விதி கள் உண்டு. இவை சக்தியைக் குறித்த முதல் விதி. அதாவது Frst Law of Thermodynamics என்றும் சக்தியைக் குறித்த இரண்டா வது விதி அதாவது Second Law of Thermodynamics என்றும் அழைக்கப்படுகின்றன.

சக்தியைக் குறித்த முதல் விதியை முதலில் பார்ப்போம். இதற்கு சரியான விளக்கத்தை பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக மாத்திரமே அறிந்து கொள்ள முடியும். முதலாவது விதியை ஆங்கி லத்தில் Law of conservation of energy and Matter என்றும் அழைக்கிறார்கள். இந்த முதலாவது விதி என்ன சொல்லுகிறதென் றால் "உலகத்தில் இப்போது புதிதாக சக்தி உருவாக்கப்படுவதில்லை. சக்தி அழிக்கப்படுவதும் இல்லை. சக்தியைப் புதிதாக உருவாக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது". இதுதான் முதல் விதியின் அடிப் படைக் கருத்துக்கள். உலகத்தில் உள்ள எல்லா பொருட்களுமே சக்தியாக மாற்றப்படலாம்: உலகத்தில் உள்ள எல்லா பொருட் களுமே சக்தியின் ஒரு வடிவத்தில் தான் உள்ளன. ஒரு பொருள் சக்தியாக மாறலாம். ஒரு சக்தி பொருளாகவும் மாறலாம். புரிய வில்லையா: பொறுமையாய் தொடர்ந்து வாசியுங்கள். நிச்சயம் புரியும். சக்தி பொருளாகலாம்—பொருள் சக்தியாகலாம் என்று சக்திக்கும் பொருளுக்கும் உள்ள இணைப்பைத் தான் ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞானி கண்டறிந்தார்.

$E=MC^2$ என்பது அவரது சூத்திரம். உதாரணமாக மரத்தை எரித்தால் அதிலிருந்து வெப்ப சக்தி உண்டாகிறது. ஒளிச் சக்தி உண்டாகிறது. அதேபோல் மூலகங்களில் உள்ள அணுவைப் பிளந் தால் அணு சக்தி உண்டாகிறது. எனவே பொருள் அதாவது matter சக்தியாக மாற்றப்படலாம் என உணரலாம். இதனால்

பொருள்கள் எல்லாமே உலகத்தில் சக்தியின் வடிவாகத்தான் உள்ளனவென்றும் உணரலாம். அதேபோல் ஒரு சக்தியும் பொருளாக மாற்றப்படலாம். வேதத்தில் இருந்து இதற்குரிய உதாரணத்தைப் பார்ப்போம். உலகத்தின் சிருஷ்டிப்பின் பணியை தேவன் நிறைவேற்றும்போது ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாட அசைவாட அதனால் உராய்வு ஏற்பட முதலில் வெப்ப சக்தி உண்டாகிறது. உராய்வு அதிகமாக அதிகமாக ஒலிசக்தி உண்டாகிறது. இன்னும் உராய்வு அதிகமாக அதிகமாக ஒளிச் சக்தி உண்டாகிறது. வேண்டுமானாலும் நீங்களே உங்கள் உள்ளங்கையை ஒன்றின்மேல் ஒன்றை வைத்து தேய்த்து அதாவது உராய்ந்து பாருங்கள். முதலில் கை சூடேறும், இன்னும் அதிக வேகமாய் தேய்த்தால் சப்தம் கொடுக்கும். தேய்த்துக்கொண்டே போய் நெருப்பு உண்டாகிற வரைக்கும் தேய்த்து விடாதீர்கள்.

இவ்வாறு ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாட முதலில் உஷ்ண சக்தியும் பிறகு ஒலிச் சக்தியும் உண்டாகிறது. பின் ஒளிச் சக்தி உண்டாயிற்று. தேவன் 'வெளிச்சம் உண்டாகக்கடவது' என்கிறார். இவ்வாறு உருவான சக்திகளில் இருந்து பொருள்கள் அதாவது matter உலகில் உண்டாக ஆரம்பித்தது. எனவே சக்தி பொருளாகலாம், பொருள் சக்தியாகலாம் என்று வேதத்தின் அடிப்படையில் பார்க்கிறோம். பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னதாக தேவன் தமது வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தினதை தான் நமது விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தின் விதிகளாக இப்போது கண்டு அறிந்துள்ளனர். விஞ்ஞானிகள் விஞ்ஞான சட்டங்களை கண்டு பிடிப்பதே தேவன் உண்டென்று நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது. சட்டமென்று ஒன்று இருக்கும் என்றால் சட்டத்தை உருவாக்கினவர் ஒருவர் இருக்கத்தான் வேண்டும்.

சக்தியைப்பற்றிய முதல் விதி உலகத்தில் புதியதாக எந்தப் பொருளோ, சக்தியோ உருவாக்கப்படுவதில்லை. உருவாக்கப்பட்ட எந்தப் பொருளும் சக்தியும் அழிக்கப்படுவதில்லையென்றும் தெரிவிக்கிறது. இன்று நாம் காணும் உலகில் உள்ள பொருள்கள் சக்தியாக மாறுகின்றன. ஆனால் புதியதாய் எந்த சக்தியும் உருவாகுவதில்லை. அதேபோல் ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறுகின்றது. ஆனால் புதியதாய் உலகத்தில் எந்த சக்தியும் உருவாவதில்லை. ஒரு உதாரணம் தருகிறேன். கவனியுங்கள், பெட்ரோல் என்ற பொருளை

எரித்தால் வெப்ப சக்தி உண்டாகிறது. இங்கு பொருள் சக்தியாக மாறுகிறதே தவிர புதிய சக்தி எதுவும் உருவாகி விடுவதில்லை. அதே போல் மின்சாரத்தை கம்பிகளில் செலுத்தினுல் கம்பி பழுக்கக் காய்ந்து வெளிச்சம் கொடுக்கிறது. இங்கு மின்சக்தி ஒளிசக்தியாக மாறுகிறதே தவிர புதிய சக்தி ஒன்றும் உருவாகிவிடவில்லை உலகில் இவ்வாறு சக்தி மாற்றங்கள் தான் நடந்துகொண்டு இருக்கிறதே தவிர புதியதாய் எந்தச் சக்தியும் உருவாக்கப்படவில்லை. உலகில் இருக்கும் மொத்த சக்தியின் அளவும் மொத்த பொருள்களின் அளவும் குறைவதில்லை. ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறும் போது சக்தி அழிக்கப்படுவதும் இல்லை. அதே போல் பொருள் எரிக்கப்பட்டால் பொருளுக்கேற்ற அளவு சக்தி உண்டாகி விடுகிறதே தவிர அழிவு ஏற்படுவது இல்லை. இதுதான் சக்தியைக் குறித்த முதல் விதி. இதை எல்லாம் வாசிக்கவேண்டுமென்பது எங்கள் தலைவிதியாய் இருக்கிறதென்று எண்ணுகிறீர்களா? சோர்ந்து போகாமல் தொடர்ந்து வாசியுங்கள்.

உலகில் ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறுவதைப் பார்க்கிறோம். ஆனல் சக்தி உருவாகுவதைப் பார்க்க முடிவதில்லை. ஏன் சக்தி உருவாகுவதைப் பார்க்க முடியவில்லை என்றால் சக்தி உலகில் இப்போது புதியதாய் உருவாகாததே காரணம் ஆகும். தேவன் ஆறு நாட்களில் உலகின் பொருட்கள், சக்தி இவற்றை சிருஷ்டித்து முடித்தார். ஏழாவது நாளில் ஓய்ந்திருந்தார். அதற்குப் பிறகு எந்த உருவாக்கும் பணியையும் தேவன் செய்யவில்லை. எனவே தான் இப்போது உலகில் சக்தி புதியதாக உருவாகவும் இல்லை. உருவாகுவதை நாம் பார்ப்பதும் இல்லை. விஞ்ஞானத்தின் அடிப்படை விதியான Frst law of Thermodynamicsக்கு வேதம் காட்டுகிற விளக்கத்தை பதிலை கண்டு கொள்ளுங்கள். கிறிஸ்தவம் விஞ்ஞான ரீதியானது. சரித்திர ரீதியானது. அனுபவ ரீதியானது.

உலகில் சக்தி உருவாக்கப்படாததால் தான் சக்தி உருவாவதை விஞ்ஞானிகள் காண முடிவதில்லை என்கின்றனர். ஏனென்றால் தேவன் தமது சிருஷ்டிப்பு பணியை செய்து முடித்து விட்டார். அப்படியென்றால் முதன் முதலில் எப்படி சக்தி உருவாகியிருக்க முடியும்? அதை விஞ்ஞானிகளால் விளக்கமுடியாது. விஞ்ஞானிகள் தான் சக்தி உருவாவதையே உலகத்தில் இப்போது பார்க்க முடியவில்லை என்கிறார்களே. தாங்கள் காணாத ஒன்றை விஞ்ஞானிகளால்

விளக்கவும் முடியாது. மேலும் விஞ்ஞானம் என்றால் அது காணக் கூடியதாகவும், பரிசோதனைகள் மூலமாய் நிரூபிக்கப்படக்கூடிய தாகவும் இருக்கவேண்டும். சக்தி உருவாவதைக் காணமுடியாது என்று சொல்லுகிற விஞ்ஞானத்தினால் சக்தி முதல் முதலில் எப்படி உருவானது என்பதற்கான விளக்கத்தை கொடுக்கவும் முடியாது. எனவே சக்தி முதலில் எப்படி உருவானதென்பதை அறிந்து கொள்ள விஞ்ஞானம் உதவாது. அதற்கு வெளிப்படுத்துதல் தேவையாய் உள்ளது. அதை தான் வேதத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் முதலாம் அதிகாரத்தின் முதல் வசனம் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று தெரிவிக்கின்றது. ஜலத்தின்மேல் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று விவரிக்கின்றது.

முதல் விதிக்கும் வேதத்திற்குமுள்ள சம்பந்தத்தைப் பார்த்து விட்டோம். சரி, இரண்டாவது விதி என்ன சொல்கிறதென்று பாருங்கள். உலகில் ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறதென்று பார்த்தோம். இவ்வாறு ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறும்போதோ அல்லது ஒரு பொருள் ஒரு சக்தியாக மாறும்போதோ பயனுள்ள சக்தியில் ஒரு பகுதி வீணாக செலவாகி விடுகிறது. இதுதான் இரண்டாவது விதி. இவ்வாறு உலகத்தில் சக்தி மாற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருப்பதால் உலகிலிலுள்ள மொத்த பயனுள்ள சக்தியில் ஒரு பகுதி அவ்வப்போது பயனில்லாத சக்தியாக செலவழிந்து போகிறது. ஒரு உதாரணம் தருகிறேன். ஒரு பல்பில உள்ள கம்பியினுள் மின்சக்தி செலுத்தப்பட்டால் செலுத்தப்பட்ட மின்சக்தி முழுவதுமே ஒளி சக்தியாக மாற்றப்பட்டு விடுவதில்லை. மின் சக்தியின் ஒரு பகுதி கம்பியைச் சூடேற்றி வெப்பசக்தியாக மாறுகிறது. நமது மின்சார பல்புகளில் உண்டாகும் வெப்பத்தினால் நமக்கு எந்த பயனும் இல்லை. ஒளிசக்தி மாத்திரமே நமக்கு பயனைத் தருகிறது. எனவே ஒரு சக்தி இன்னொரு சக்தியாக மாறும்போது பயனுள்ள சக்தியில் ஒரு பகுதி வீணாக செலவழிந்து போகிறது என்று நாம் பார்க்கிறோம் இதனால் உலகிலுள்ள மொத்த பயனுள்ள சக்தியின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது. உலகின் மொத்த சக்தி மேலான நிலைமையிலிருந்து பயனற்ற கீழான நிலைமைக்கு சென்று கொண்டே இருக்கிறது.

ஆனால் டார்வினோ கீழான நிலைமையிலிருந்து மேலான நிலைமைக்கு உயிரினங்கள் உருமாறினதாக கூறுகிறார். விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும் சக்தியைக் குறித்த இரண்டாவது விதியும் டார்வினுடைய கொள்கையும் ஒன்றுக்கொன்று எதிரானவை. அவ்வப்போது டார்வினின் கொள்கையை தாக்காவிட்டால் நம்மாலும் சும்மா இருக்க முடிவதில்லை.

அப்படியென்றால் ஏன் இந்த இரண்டாவது விதியின்படி பயனுள்ள சக்தியின் அளவு குறைந்து கொண்டே போகிறது? தேவன் தான் உலகின் சக்தியையெல்லாம் உருவாக்கினாரென்றால் அதெல்லாம் நன்மையாகத்தானே இருக்க வேண்டும். ஏன் மேலான நிலைமையிலிருந்து கீழான நிலைமைக்கு சக்தி செல்கிறது? இதற்கு தேவன் காரணமல்ல. தேவன் தாம் சிருஷ்டித்த மனிதனிடம் இந்த உலகத்தை ஒப்படைத்தார். அவன் பாவம் செய்தபோது உலகம் சாபத்துக்குள்ளானது. இந்த சாபம் உலகின் மேல் வந்ததால்தான் உலகம் இன்று அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்த சாபம் மனிதன் மேல் மாத்திரம் அல்ல. பூமியின் மேலும் வந்ததென்பதை ஆதியாகமம் 3-ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் என்ற வார்த்தைகளினால் அறியலாம். அதனால் தான் நாம் உலகில் பார்க்கும் எல்லாமே மேலான நிலைமையிலிருந்து கீழான நிலைமைக்கு சென்று கொண்டிருக்கின்றன. நமக்கு வயது ஆக ஆக நம் சரீரம் முதிர்வடைந்து பலவீனமாகிறது. அழகாய் வீடு கட்டுகிறோம். பழையதாகி ஒழுக ஆரம்பிக்கிறது. இரும்பு துருப்பிடிக்கிறது. மரம் உளுத்துப் போகிறது. காகிதம் மக்கிப் போகிறது. இந்த கீழ் நோக்கி செல்லும் தன்மையை தான் இரண்டாவது விதியென்று விஞ்ஞானம் கூறுகிறது. நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது. அவைகள் அழிந்து போகும். நீரோ நிலைத்து இருப்பீர். அவைகளெல்லாம் வஸ்திரம் போல் பழமையாய் போகும். அவைகளை ஒரு சால்வையைப் போல் மாற்றுவீர். அப்போது மாறிப் போகுமென்று தாவீது சங். 102:25, 26-ல் கூறுவதினால் இரண்டாவது விதியை நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்த இரண்டாவது விதிக்கு ஆதாரமாய் இன்னொரு வசனத்தையும் பாருங்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 51-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் வானம் புகையைப் போல் ஒழிந்து போகும். பூமி வஸ்திரத்தைப் போல் பழசாய் போகும் என்று அங்கு வாசிக்கிறோம்.

இவ்வாறு உலகத்தின் சிருஷ்டிப்புகள் எல்லாம் அழிவை நோக்கி சென்று கொண்டே இருப்பதைத்தான் பவுலும் ரோமருக்கு எழுதின நிருபத்தில் 8-ம் அதிகாரத்தின் 22-ம் வசனத்தில் நமக்கு தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது என்று எழுதுகிறார்.

உலகிலுள்ள பயனுள்ள சக்தி குறைந்து கொண்டே போகிறது என்று முன்னால் பார்த்தோம். நன்றாய் தெரிந்து கொள்ளுங்கள். உலகில் உள்ள மொத்த சக்தியும் குறைந்து கொண்டு செல்லவில்லை. உலகிலுள்ள மொத்த சக்தியில் பயனுள்ள சக்தி தான் குறைந்து கொண்டே போகிறது. இவ்வாறு உலகம் சென்று கொண்டேயிருப்பதால் எபிரேயர் முதலாம் அதிகாரம் 11-ம் வசனத்தின்படி உலகம் எல்லாம் வஸ்திரம்போல் பழையதாகிக் கொண்டிருப்பதால் உலகம் பயனுள்ள சக்தியே இல்லாதவாறு போவதற்கு முன்னதாக தேவன் இடைப்பட வேண்டும். நமக்குத் தேவையான பயனுள்ள சக்தியே உலகில் இல்லாமல் போய் விட்டால் பிறகு உலகம் ஒரு stand still-க்கு வந்துவிடும், அதாவது அப்படியே நின்றுவிடும். அதற்கு முன்னதாய் தேவன் உலகத்தின் காரியங்களில் ஈடுபட்டு அதை சரி செய்வார். இது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் முடிவில் சம்பவிக்கும். எங்கே ஆரம்பித்து எங்கே போய் முடித்திருக்கிறோம் பார்த்தீர்களா ? ஆனால் கட்டுரை இன்னும் முடியவில்லை. தேவன் நிச்சயமாய் பயனுள்ள சக்தி இல்லாமல் உலகம் நின்று போவதற்கு முன் இடைப்படுவார். ஏனென்றால் தேவன் செய்வதெல்லாம் நிலைத்து நிற்கவேண்டும். பிரசங்கியின் புத்தகம் 3-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன். அதினோடே ஒன்றும் கூட்டவும் கூடாது. அதிலிருந்து ஒன்றும் குறைக்கவும் கூடாது. மனுஷர்கள் தமது சமூகத்தில் பயந்து இருக்கும்படி தேவன் இப்படி செய்து வருகிறார் என்று வாசிக்கிறோம்.

அப்படியென்றால் வேதத்தில் ஓரிடத்தில் வானமும் பூமியும் ஒழிந்துபோகும் என்றும் இன்னொரு இடத்தில் வானமும் பூமியும் அழியாதென்றும் கூறப்பட்டுள்ளதே என்று நாம் கட்டுரையின் முன் பகுதியில் பார்த்த முரண்பாட்டைக் குறித்த கேள்விக்கு இப்போது பதிலைப் பார்ப்போம். தேவன் உலகத்தை சிருஷ்டித்தார். சக்தியை

யும் பொருளேயும் உருவாக்கினர். தாம் சிருஷ்டித்த உலகத்தை மனிதனிடத்தில் கொடுத்தார். மனிதன் பாவம் செய்தான். உலகம் சாபத்திற்குள்ளானது. எனவே மேலான நிலைமையில் இருந்து தாழ்வான நிலைமைக்கு உலகம் சென்று போய் உலகம் அப்படியே நின்று விடாதபடிக்கு தேவன் இடைப்பட்டு தமது வருகையில் என்ன செய்யப் போகிறர் என்பதை 2 பேதுரு 3-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் வாசிக்கிறேம். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்போது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். பூதங்கள் வெந்துருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும் என்று வாசிக்கிறேம், ஆங்கில வேதாகமத்தில் இது எவ்வாறு கூறப்பட்டிருக்கிறதென்பதைத் தருகிறேன். வாசியுங்கள். But the day of the Lord will come as a thief in the night in the which the heavens shall pass away with a great noise and the elements shall melt with fervent heat the earth also and the works that are there in shall be burned up.

ஆண்டவருடைய வருகையில் உலகிலுள்ள பொருள்களான மூலகங்களின் அணுக்கள் எல்லாம் பிளக்கப்படும். பெரிய சப்தம் உண்டாகும். உஷ்ணம் உண்டாகும். உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் எரிந்து சக்தியாக மாறும். பொருள்கள் சக்தியாக மாறுமென்று முன்னுலேயே பார்த்திருக்கிறேம். இவ்வாறு சபிக்கப்பட்ட உலகம் எரிந்து அதனுல் உண்டாகிற சக்தியைக் கொண்டு மறுபடியும் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் தேவன் சிருஷ்டிப்பார். முதலில் வானத்தையும் பூமியையும் உருவாக்கின போது எப்படி சக்தி பொருளாக மாறினதோ அப்படியே இப்போது நாம் காண்கிற சாபத்திற்குட்பட்டதனுல் தாழ்வை நோக்கி சென்று கொண்டிருக்கிற பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் அக்கினியினுல் எரித்து சக்தியாக மாற்றி புதிய வானத்தையும் புதிய பூமியையும் தேவன் சிருஷ்டிப்பார். Atomic disintegration will be followed by atomic integration.

நாம் இப்போது காண்கிற வானமும் பூமியும் அக்கினியினுல் எரிந்துபோம், என்பதினுல் தான் வானமும் பூமியும் ஒழிந்துபோகுமென்று ஓரிடத்தில் வேதம் கூறுகிறது. ஆனுல் தேவனுடைய

வருகையில் எரிந்து போகிற பூமியிலிருந்து உண்டாகும் சக்தியைக் கொண்டு மறுபடியும் ஒரு புதிய வானத்தையும் பூமியையும் தேவன் சிருஷ்டிக்கப் போவதினுல் தான் வானமும் பூமியும் நிரந்தரமானவை என்றும் வேதம் கூறுகிறது. பொருட்கள் சக்தியாக மாற்றப்பட்டு மறுபடியும் சாபமில்லாத பொருளாக தேவனுடைய வருகையில் மாற்றப்படபோகின்றன. கர்த்தருடைய வருகையில் ஏற்படப் போகிற இந்த மாற்றத்தினுல் எந்த சக்தியின் அளவும் பொருளின் அளவும் குறையப் போவதில்லே. தேவன் செய்தது எல்லாமே தான் நிலேத்திருக்குமென்று வேதம் கூறுகிறதே. சக்தி மாற்றம் தான் உண்டாகும்.

அப்போது ஒரு புதிய வானம் புதிய பூமி உண்டாகும். அதிலே சாபமிராது. அதிலே Second law of Thermodynamics......இராது. அதாவது பயனுள்ள சக்தி குறையாது. புதிய வானம் புதிய பூமியில் வாழும் போது வயதாவதும் பொருள்கள் பழமையர்வதும் இராது. வெளிப்படுத்தின விசேஷத்தின் 21-ம் அதிகாரத்தின் 5-ம் வசனத்தை கவனியுங்கள். 'இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்! என்று தேவன் சொல்வதாக வாசிக்கிறேம். சாபத்தில் சென்று கொண்டிருக்கிற பூமியை அக்கினியால் அழித்து சக்தியாக மாற்றி மறுபடியும் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் தேவன் உருவாக்குவார்.

நாம் காண்கிற வானமும் பூமியும் அழிந்து போகுமா ? ஆம் அழிந்து போகும். தேவன் உருவாக்கின வானமும் பூமியும் நிலே நிற்குமா ? ஆம் இப்போது காண்கிற வானமும் பூமியும் எரிந்து புதிய வானமும் புதிய பூமியும் உண்டாவதனுல் தேவன் உருவாக்கின வானமும் பூமியும் நிலேநிற்கும். முரண்பாடுகள் வேதத்தில் இல்லே. இல்லவே இல்லே.

# சிந்தியுங்கள்

(இதுதான் புதிய பகுதி முகவுரை அவ்வளவுதான் தொடர்ந்து வாசியுங்கள்.)

அக்டோபர் முப்பத்தொன்றும் தேதி காலை ஒன்பது மணிக்கு வாடிகன் நகரில் தமிழக விசுவாசிகளுடன் பஸ்ஸில் போய் இறங்கின வுடனே எங்களுக்கு ரோம் நகரத்தை சுற்றி காட்ட வந்த வழிகாட்டி என்னிடம் ''இந்தியாவிலிருந்து வந்திருக்கிறீர்களா? உங்கள் பிரதமர் சுடப்பட்டு கொல்லப்பட்டார்'' என்று தெரிவித்தார். குழுவிலுள்ள மற்றவர்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என்று கூறி விட்டார். நான் சிந்திக்க ஆரம்பித்தேன்......ரோமில் ஒவ்வொரு இடமாய் காண்பித்து பிறகு கிறிஸ்தவ இரத்த சாட்சிகள் மிருகங் களுடன் சண்டையிட்டு மரித்த ''கலோசியம்'' என்ற ரோமர் காலத்து கலையரங்கிற்கு வந்தோம். மிருகங்கள் அடைக்கப்பட் டிருந்த அறைகள், அவற்றிற்கு எதிரே கிறிஸ்தவ விசுவாசிகள், அடிமைகள் அடைக்கப்பட்டிருந்த அறைகள், பார்வையாளர்கள் உட்கார்ந்திருந்த அறைகள், பார்வையாளர்கள் உட்கார்ந்திருந்த காலரி இவையெல்லாம் அப்படியே இருக்கின்றன. பிரமாண்டமான இந்த கலையரங்கு பல இடங்களில் உடைந்து இருக்கிறது. இந்த கட்டிடத்திலிருந்து கற்களை எடுத்து சென்று பிறகு கிறிஸ்தவ ஆலயங்களை ரோமில் கட்டினார்களாம். இரத்த சாட்சிகளின் இரத் தம் சபையின் வித்து. மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களும் தேசத்திற்காய் இரத்த சாட்சியாய் மரித்திருக்கிறார்கள். கிறிஸ்தவ இரத்த சாட்சிகள் இரத்தம் சிந்தின இடத்தை பார்த்துவிட்டு வந்த வுடனே உணர்ச்சி வசப்பட்டதினாலோ என்னவோ ''உங்கள் பிரதமரின் மரணத்தை உங்கள் குழுவினருக்கும் அறிவித்து விடு வோம் என்றார், எங்கள் வழிகாட்டி. அறிவித்தேன். எல்லாரும் அதிர்ச்சி அடைந்தனர்.........

வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு. தாழ்வு காலத் தில் சிந்தனை செய்'' என்று ஞானி கூறுவதாக பிரசங்கியின் புத்த

கத்தின் ஏழாம் அதிகாரத்தின் பதினான்காம் வசனத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்தவ விசுவாசிகளும் இந்த நேரத்தில் சிந்தனை செய்வது நல்லது.

பவுல் ஒன்று தீமோத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் "நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தியென்னவெனில் ...... நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்' என்று கூறுகிறார். முக்கியமாய் ராஜாக்களுக்காய் ஜெபியுங்கள் என்று பவுல் கூறுகிறார். ஆங்கில வேதாகமத்தில் "I exort therefore first of all ......... prayers be made for kings" என்று கூறப்பட்டுள்ளது. சரியாகச் சொன்னால் உங்கள் ஜெபத்தில் விண்ணப்ப பகுதியை ஆரம்பிக்கும்போது முதலில் ராஜாக்களுக்காக ஜெபிக்க பவுல் சொல்லுகிறார். அநேகர் "ஆண்டவரே என்னை ஆசீர்வதியும் என் மனைவியை ஆசீர்வதியும், என் பிள்ளைகளை ஆசீர்வதியும்" என்று ஜெபித்து முடித்து விடுகின்றனர். முதலில் நீங்கள் ஜெபிக்கவேண்டியது ராஜாக்களுக்காக, அப்புறம் தான் மற்ற குறிப்புகளுக்காக ஜெபிக்கவேண்டும். "first of all" என்று பவுல் கூறுவதை கவனியுங்கள். எதற்கு முதலிடம் எதற்கு இரண்டாவது இடம் கொடுக்க வேண்டும் என்பதை அறியாததினாலேயே நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் குழப்பங்கள் பல ஏற்பட்டுள்ளன.

மாண்புமிகு இந்திராகாந்தி அவர்கள் கொலை செய்யப்படலாம்—என்ற செய்திகள் பரவலாக சில மாதங்களாகவே செய்தித்தாள்களில் வந்து கொண்டிருந்தன (சில விசுவாசிகள் நியூஸ் பேப்பர் கூட படிப்பதில்லை. பரிசுத்தம் கெட்டுவிடும் என்று) தங்கள் பிரதமரின் பாதுகாப்பிற்காய் எத்தனை கிறிஸ்தவ விசுவாசிகள் தினந்தோறும் தங்கள் ஜெபத்தில் முதலில் ஜெபித்தார்கள் என்பது கேள்விக்குறி? மாண்புமிகு இந்திராகாந்தி அவர்களின் மரணத்தை தொடர்ந்து இனக் கலவரங்கள், படுகொலைகள் தற்கொலைகள் கலகமில்லாமல் அமைதலான ஜீவனம் பண்ணமுடியாமல் போய் விட்டது. நாட்டின் ஒருமைபாட்டிற்கே ஆபத்து வந்துவிட்டது. ராணுவத்தில் சீக்கியர்கள் அநேகர் இருப்பதினால் ராணுவ புரட்சி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம். எங்கும் பதட்ட நிலைமை. காரணம் விசுவாசிகள்—ஜெபிக்க தெரிந்தவர்கள்—உண்மையான ஜீவனுள்ள ஆண்டவரை வணங்குகிறவர்கள்—ஜெபிக்காததினாலே.

கர்த்தருடைய கிருபையினாலும் பரிசுத்தவான்களின் ஜெபத்தி னாலும் தேசம் ஓரளவு அமைதிக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு விட்டன. ஆனால் அஸ்ஸாமிலும், பஞ்சாபிலும் தேர்தல் கிடையாது, காரணம் தேர்தல் நடந்தால் கலவரங்கள் ஏற்படும் என்பதினாலேயே (பஞ்சாப், அஸ்ஸாம் மாநிலங்களின் சமாதானத்திற்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.) தேசம் எல்லாப் பக்கங்களிலும் விரோதிகளால் சூழப்பட்டுள்ள நேரத்தில் திறமையான பிரதமர் கொலை செய்யப்பட்டிருக்கிறார், இந்த சந்தப்பத்தை பயன்படுத்தி அந்நிய ஆக்கிரமிப்பு நடக்கு மென்றால் விசுவாசிகள் ஜெபிக்காததே காரணமாகும். இனக் கலவரங்கள் மறுபடியும் வெடிக்குமென்றால், தேசத்திற்காய் விசு வாசிகள் பரிந்து மன்றாடாததே காரணமாகும். ராணுவ புரட்சி வருமென்றால் ஜெபக் குறைவே காரணம்.

அநேகர் ஜெபிக்கும்போது தேசத் தலைவர்களின் இரட்சிப்புக் காய் மாத்திரம் ஜெபிக்கின்றனர். அவர்கள் இரட்சிக்கப்படவில்லை யென்றால் அவர்களுக்காய் பிறகு ஜெபிப்பதில்லை. தேச தலைவர்களை ஒரு பொருட்டாக நினைப்பதும் இல்லை. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது தேசத்தை ஆண்ட ராஜாக்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களுக்காய் ஜெபிக்கச் சொல்லுகிறார் பவுல். ஏன்? நாம் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு அவர்களுக் காய் ஜெபிக்கவேண்டுமாம். சில விசுவாசிகள் "நம்முடைய அமைச்சர்கள் இரட்சிக்கப்படாதவர்கள் அவர்கள் ஆட்சி செய்தால் இப்படிதான் கலவரம் நடக்கும்" என்று எளிதில் கூறிவிடுகின்றனர். வசனத்தை நன்றாக கவனியுங்கள். நாம்-விசுவாசிகளாகிய நாம் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு தேவனை அறியாத தேசத் தலைவர்களும் தேசத்தை ஒழுங்காய் ஆளும்படி ஆண்டவர் செய் வார்—நம் ஜெபத்தைக்கேட்டு. தேசத்தில் இனக் கலவரங்களும், பணவீக்கமும், லஞ்ச ஊழல்களும், குற்றங்களும் பெருகுகிறது என்றால் விசுவாசிகள் அதிகாரத்திலுள்ளவர்களுக்காய் ஜெபிக்காததே காரணமாகும்.

நமது ஜெபக்குறைவினால் மிகவும் திறமை வாய்ந்த பிரதமரை மிகவும் இக்கட்டான நேரத்தில் தேசம் இழந்திருக்கிறது என்பதை கர்த்தருடைய வார்த்தைகளாக தெரிவிக்கிறேன்.

ஒருவேளை ஒருசிலர் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அமெரிக்காவில் ஒரு கூட்டத்தில் கென்னத் ஹேகின் என்ற தேவனால் மிகவும் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு வருகிற தேவ ஊழியக்காரர் செய்தி கொடுத்துக்கொண்டிருந்த போது ஒருதரிசனத்தைக் அவர் கண்டார். மூன்று கறுப்பு நிறமான தவளைகளைப் போன்ற உருவங்கள் அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து ஏறி அமெரிக்காவிற்குள் நுழைவதாக தன் தரிசனத்தில் அவர் கண்டாராம். தேவன், அப்போது "இந்த மூன்று ஆவிகளும் அரசின் தலைவர்களை வஞ்சிக்க செல்லுகின்றன. நீங்கள் ஜெபிக்காவிட்டால் அமெரிக்க ஜனாதிபதியின் பெயருக்கு இழுக்கு உண்டாக கூடிய சம்பவங்கள் நடைபெறும். ஜெபித்தால் அவை சம்பவிக்காது'' என்றாராம். கூட்டம் முடிந்த பிறகு நம்மைப்போலவே எல்லாரும் ஜெபிக்க மறந்தனர். வருடங்கள் கடந்தன. பிறகு புராடஸ்டான்டு ஜனாதிபதியான நிக்ஸன் வாட்டர் கேட் குழப்பத்திற்குள்ளானார். உலகமெங்கும் அவர் பெயர் கெட்டுப்போனது. ஒரு கிறிஸ்தவ ஜனாதிபதி இவ்வாறு செய்யலாமா என்றனர் எல்லாரும். நிக்சனுடைய ஆலோசகரில் ஒருவர் பில்லிகிரகாம். நிக்ஸனுடைய தவறினால் கவிசேஷகர் பில்லிகிரகாமுக்கும் அவப்பெயர். 1979-ம் ஆண்டு இந்த குழப்பங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்போது மறுபடியும் டாக்டர் கென்னத்ஹேகின் ஒரு கூட்டத்தில் ஒருநாள் மறுபடியும் அவர் ஆவிக்குள்ளானார். ஒன்பது வருடங்களுக்கு முன் தான் கண்ட அதே மூன்று கரிய தவளைகளை தனது தரிசனத்தில் கண்டார். இயேசு கிறிஸ்து தரிசனத்தில் தோன்றி பின் வருமாறு சொன்னாராம். "இதேபோன்ற காட்சியை நீ 1970-ல் கண்டாய். நீயும் விசுவாசிகளும் நீங்கள் செய்யவேண்டியதை செயதிருந்தால் தேசத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கும் அவமானம் ஏற்பட்டிருக்காது. தேசத்தில் உண்டான கலவரங்கள் ஏற்பட்டிருக்காது. உங்கள் ஜனாதிபதி தவறுகளை செய்திருக்கமாட்டார். தேசத்தின் சபையைத்தான் நான் ஜனாதிபதி செய்த குற்றங்களுக்கு பொறுப்பாக்குவேன். நான் சொன்ன இந்த எச்சரிப்பை சில கிறிஸ்தவர்களிடம் சொன்னால் அவர்கள் சிரிக்கலாம். ஆனால் என் நியாயாசனத்தின் முன் நிற்கும்போது தவறுகளை செய்த ஜனாதிபதியைவிட கிறிஸ்தவ விசுவாசிகள் அதிக கண்டனத்தை அடையும்போது—அப்போது அவர்கள் சிரிக்கமாட்டார்கள்''

1984-ம் ஆண்டு ஜூலை மாதம் திருச்சி பேரின்ப பெருவிழாவின் வேதபாட வகுப்பில் ஜெபத்தை குறித்த போதனைகளை கூறும்போது

''பரிந்து மன்றாடுதல்'' என்ற ஜெபத்தை குறித்து பேசும்போது நான் கூறின வார்த்தைகளின் ஒரு பகுதியை தருகிறேன். இதை தீர்க்க தரிசமாக நான் சொல்லவில்லை. ஒரு ஆலோசனையாக கூட்டத்தில் தெரிவித்தேன்.

''நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் உயிருக்கு ஆபத்து உள்ளது என்று பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. தேசம் இனக்கலவரங்களால் நிறைந்துள்ளது. எந்த காலத்திலும் இல்லாதவாறு நமது தேசம் நான்கு பக்கங்களிலும் நான்கு எதிரி நாடுகளால் சூழப்பட்டுள்ளது. இங்கிலையில் பிரதமர் இந்திராவின் பாதுகாப்பிற்காய் ஜெபியுங்கள். ஒருவேளை பிரதமர் இந்திரா அவர்கள் கொலை செய்யப்படுவாரென்றால் அதற்கு உங்களுடைய ஜெபக் குறைவே காரணமாக இருக்கும்''

இதே ஆலோசனையை மற்ற இடங்களில் நடந்த கூட்டங்களிலும் தெரிவித்திருக்கிறேன். பாரதப் பிரதமரின் மரணத்தைக் குறித்து கேள்விப்பட்டவுடன் நானும் இக்குறிப்புகளுக்காய் போதுமான அளவு ஜெபிக்கவில்லை என்று உணர்த்தப்பட்டேன். ஆண்டவரிடம் மன்னிப்பிற்காய் வேண்டினேன். இவ்வாறு தேசத்திற்காய் தலைவர்களுக்காய் ஏறெடுக்கப்படுகிற ஜெபம் பரிந்து மன்றாடுதலின் ஜெபம் என்ற விதத்தை சேர்ந்தது. உங்களுடைய தனிப்பட்ட தேவைகளுக்காய் ஏறெடுக்கப்படும் விசுவாச ஜெபம் ஒரே ஒருமுறை ஏறெடுக்கப்பட்டால் போதும். ஆனால் பரிந்து மன்றாடுதலின் ஜெபத்திற்கு நாள், நேரம், எத்தனைமுறை என்பது கிடையாது. தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். இதைக்குறித்து பின்னால் ஜெபிக்க கற்றுக்கொள்ளுங்கள் பகுதியில் பார்ப்போம்.

ஐந்தே வருட அரசியல் அனுபவம் உள்ள வாலிபரான மாண்புமிகு ராஜீவ் அவர்கள் மிகவும் பாரமான பொறுப்பை இப்போது ஏற்றுள்ளார். நாம் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு அவருக்காய் ஜெபியுங்கள். அவரது இரட்சிப்பிற்காய் ஜெபியுங்கள். அவரது மனைவி சோனியா காந்தி இத்தாலிய நாட்டை சேர்ந்தவர்கள். அவரது முக்கிய காரியதரிசி பி. சி. அலெக்சாண்டர். புரிந்துகொண்டு ஜெபியுங்கள். உணர்ந்து ஜெபியுங்கள்;

தேசத்தின் தேர்தலில் கர்த்தருக்கு சித்தமான தலைவர்கள் ஆட்சிக்குவர ஜெபியுங்கள், முக்கியமாய் தமிழகத்தில் ஸ்திரமான ஆட்சி அமைய ஜெபியுங்கள். தேவனுடைய சித்தம் தமிழக தேர்தலில் நிறைவேற ஜெபியுங்கள். பிரதமர் ராஜீவ் அவர்களின் உயிருக்கும் ஆபத்து என்று சொல்லப்படுகிறது. அவரது பாதுகாப்பிற்காய் ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்தில் முதலில் ராஜாக்களுக்காய் ஜெபியுங்கள்.


# இந்திய வாலிபர் முகாம்-85

இடம் : மகாபலிபுரம், ஜமீன் தோட்டம்,
26—1—85 (குடியரசு தின விடுமுறைநாள்)

செய்தியாளர்கள் :

சகோ. S ஜஸ்டின் பிரபாகரன்
YPFI சகோதரர்கள்

## "பரிசுத்த ஆவியின் அருள்மாரி கூட்டம்"

பிரத்தியேக பேருந்துகள் பெரியார் திடலின் எதிரே இருந்து காலை 7 மணிக்கு புறப்படுகின்றன. பஸ் பதிவு கட்டணம் ரூ. 12
மதிய உணவு விற்பனைக்கு உண்டு.
பஸ் பதிவு செய்ய கடைசி தேதி 22—1—85.

தொடர்பு முகவரி :

இந்திய வாலிபர் ஐக்கியம்
19, சீனிவாச தெரு,
அயன்புரம், சென்னை-600 023

# கடைசி பக்கங்கள்

**இஸ்ரேலிய சுற்றுப் பயணம்,**—இஸ்ரேல் பயணத்தை முடித்து நவம்பர் 2-ம் தேதி சுகமாக திரும்பினேம். பயணம் ஆசீர்வாதமாக இருந்தது. ஜெபித்த அனைவருக்கும் நன்றி.

85-ம் ஆண்டு செப்டம்பர்—அக்டோபரில் இஸ்ரேல் பயணம் உண்டு. கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் இப்போதே பதிவு செய்து கொள்ளுங்கள். அநேகர் இந்த வருடம் கலந்துகொள்ள ஆயத்தப்பட்டு கொண்டிருக்கிறார்கள். எனவே சீக்கிரம் எழுதுங்கள். பாஸ்போர்ட் முதல் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்கிறேன்.

**புத்தகங்கள் :** 666, III-வது உலக மகா யுத்தம் என்ற இரண்டு புத்தகங்கள் தேவையாயின் ரூ. 5/- M.O. செய்யுங்கள்.

**பாடல் கேசட்டுகள் :** நான்கு வால்யூம் பாடல் கேசட்டுகள் வெளியாகியுள்ளன. ஒவ்வொன்றின் விலை ரூ. 40/- தபாலில்பெற.

| செய்தி கேசட்டுகள் | தபாலில்பெற |
|---|---|
| ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் | |
| இரண்டாம் வருகை (90—C60) | ரூ. 60/- |
| நோவாவின் வெள்ளம் (C—90) | ரூ. 35/- |
| ஆவி ஆத்துமா சரீரம் (C—60+C—60) | ரூ. 55/- |
| தெய்வீக சுகம் (C—90) | ரூ. 35/- |

**பத்திரிகை :** இடிமுழக்கத்தின் 83—84-ம் ஆண்டின் ஆறு இதழ்களும் தேவையாயின் ரூ. 20/- M.O. செய்யுங்கள். ஆறு பழைய இதழ்களும் தேவை என்று குறிப்பிடுங்கள். **84—85க்கு இன்னும் சந்தா புதிப்பிக்காதவர்கள் உடனே புதுப்பியுங்கள், சீக்கிரம்! சீக்கிரம்!**

**காணிக்கை:** காணிக்கை அனுப்பி ஊழியத்தின் வளர்ச்சிக்கு உதவுகிற அனைவருக்கும் நன்றி. டிராப்டு, செக் இவற்றை அனுப்புவதானால் D. Justin Prabakaran என்ற பெயருக்கு அனுப்புங்கள். மணியார்டர்களை இடிமுழக்கம் என்ற பெயருக்கு அனுப்புங்கள்.

**கூட்டங்கள்:** அதிகமான கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது. சில பொது கன்வென்ஷன்களில் கலந்து கொள்கிறேன்.

**நான் கலந்துகொள்ளும் கூட்டங்கள்:**

**(1) கிறிஸ்தவ விசுவாசிகள் ஐக்கிய கன்வென்ஷன்:**

**காலம்:** ஜனவரி 12, 13, 14, 15

**இடம்:** கோவில்பட்டி நெல்லை மாவட்டம்

விவரங்கட்கு;

**சகோ. செல்லையா,**
யெகோவா ஷாலோம்
**கோவில்பட்டி.**

**(2) "பெந்தகோஸ்தே பெரு விழா"**

**காலம்:** பிப்ரவரி 6, 7, 8, 9, 10

**இடம்:** தமுக்கம் மைதானம், மதுரை

சந்தா அனுப்பும்போது சந்தா எண்ணை குறிப்பிடுங்கள்.
புதிய சந்தாவா, புதுப்பித்தலா என்றும் குறிப்பிடுங்கள்.

**ஜெபியுங்கள்! ஜெபிக்கிறேன்'**

**"ஷாலோம்"**

கிறிஸ்துவின் பணியில்,
**S. ஜஸ்டின் பிரபாகரன்**

## கடைசி (கால) செய்திகள்! கடைசி (கால) செய்திகள்!

Jerusalem : Extremist Israelis of the "Guardians of the Jerusalem Mount" movement on Tuesday held mass prayers in front of the Al Aqusa Mosque, Islam's third holiest shrine. The day was the anniversary of the demolition of the solomon Temple here. Jewish extremists want to remove the mosque in East Jerusalem which was occupied on the 1967 war to build their temple on the site.

**மேற்கண்ட செய்தியின் தமிழாக்கம் :**

**எருசலேம் :** தீவிரவாத யூதப் பிரிவை சேர்ந்த 'எருசலேம் மலையின் பாதுகாவலர்' என்ற இயக்கத்தினர் செவ்வாய்கிழமை யன்று இஸ்லாமியரின் மூன்றுவது தொழுகை ஸ்தலம் என்று கருதப்படுகிற அல் அக்சா மசூதியின் முன்னதாக ஒரு பொது பிரார்த்தனையை நடத்தியுள்ளனர். அவர்கள் பிரார்த்தனை ஏறெடுத்த நாள் சாலமோன் தேவாலயம் அழிக்கப்பட்ட நாளின் ஆண்டு நிறைவு நாளாகும். இந்த தீவிரவாத யூத பிரிவினர் தாங்கள் 1967ல் கைப்பற்றின கிழக்கு எருசலேமில் உள்ள இந்த மசூதியை அகற்றிவிட்டு தங்கள் தேவாலயத்தை கட்ட விரும்புகின்றனர்.

மேற்கண்ட செய்தி ஹிந்து பத்திரிகையின் ஆகஸ்டு மாத இதழில் வெளியாகியுள்ளது, சென்ற இதழில் யூதர்கள் அல் அக்சா மசூதியை விலை பேசுகிறார்கள் என்ற செய்தியை வாசித்திருப்பீர்கள். இப்போது அந்த மசூதியின் முன்னதாக தங்களுடைய தேவாலயம் கட்டப்படுவதற்காக பிரார்த்தனை நிகழ்த்தியுள்ளார்கள். எருசலேம் தேவாலயம் கட்டப்படப்போகிற செய்திகள் செய்தி தாள்களில் வர ஆரம்பித்துள்ளது. வரப்போகிற அந்தி கிறிஸ்து எருசலேம் தேவாலயத்தை கட்டுவான் என்று வேதத்திலிருந்து அறிகிறோம். இதை குறித்த விளக்கமான கட்டுரையை இடிமுழக்கத்தில் எதிர்பாருங்கள். இப்போது இந்த தேவாலயத்தை கட்ட யூதர்கள் பிரார்த்தனை செய்கின்றனர் என்று ஹிந்து பத்திரிகையின் செய்தி தெரிவிக்கிறது. Bible prophecies are fulfilled in News-

papers வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் செய்தி தாள்களில் நிறைவேறுகின்றன, அப்புறம் என்ன? காலம் இனி செல்லாது. ஒரு காசுகூட வராது. உன் சட்டம் அங்கே நில்லாது. உன் பட்டம் அங்கே செல்லாது! செல்லாது! செல்லாது! (இச்சிறப்பு பாடலை கிறிஸ்தவ புரட்சி கீதங்கள் IV Volumeல் கேளுங்கள்.)


வெளிவந்து விட்டது !

## கிறிஸ்தவ புரட்சி கீதங்கள்

### VOLUME IV

### C—45

காலம் இனி செல்லாது, கொஞ்சம் காலந்தான், செய்துக்கோ செய்துக்கோ அநியாயத்தை செய்துக்கோ, அல்லேலூயா என் ஆத்துமா, இயேசு உன்னை அழைத்தார் முதலிய பாடல்கள் அடங்கியது.

தபாலில் பெற ரூ. 40/- M.O. செய்யவும்.




# சொன்னார்கள் ....

எனக்கு மனிதர்களைத் தெரியும். இயேசு கிறிஸ்து மனிதர் அல்ல. மேலோட்டமாய் பார்க்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்துவுக்கும், மற்ற உலக சமய அரசியல் தலைவர்களுக்கும் ஒரு ஒற்றுமை தெரியலாம். மற்ற சமயங்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் அளவிட முடியாத இடைவெளி உள்ளது. கிறிஸ்துவைப் பற்றிய எல்லாமே என்னைத் திகைக்க வைக்கிறது. அவருடைய ஆவி என்னை ஆச்சரியப்பட வைக்கிறது. அவருடைய தீர்மானங்கள் என்னை திடுக்கிட வைக்கின்றன. உலகத்தின மற்ற தலைவர்களை அவரோடு ஒப்பிடவே முடியாது. அவரை நெருங்க, நெருங்க, ஆராய, ஆராய அவர் எவ்வளவு பெரியவர் என்று உணருகிறேன். அவரைக் குறித்த எல்லாமே அற்புதம். ஆச்சரியப்படவைக்கும் அற்புதம். அவருடைய கிறிஸ்தவத்தின் ஞானம் உயர்ந்தது. ஆனால் மனித ஞானத்தைப் போன்றது அல்ல. அது. அவரிடத்தில் மாத்திரமே அவரைப் போன்ற ஒரு மாதிரி வாழ்க்கையை காணமுடியும். நான் சரித்திரத்தில் அவரைப் போன்ற ஒருவரையும் அவரைக் கூறும் சுவிசேஷங்கவளப் போன்ற, கொஞ்சமாவது அதைப் போன்ற புத்தகங்களையும் தேடி காணக் கிடைக்காமல் போனேன்.

—நெப்போலியன் போன பார்ட்டே

(சக்கரவர்த்தி நெப்போலின் நமது ராஜாதி ராஜாவை குறித்து சொன்ன வார்த்தைகள் தான் மேலேயுள்ளது இயேசு ஒரு சாதாரண மனிதர் தான் என்று சொல்லுகிறவர்கள் கவனியுங்கள்).

8

*Contact Address*

**S. JUSTIN PRABAKARAN**
**KIL KAVARAPET, S. A. Dt.**
**607 112. Tamil Nadu,**
**INDIA**